விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 04 வெள்ளிக்கிழமை (21.10.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 306

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# ஆளில்லா விமானம் மூலம் வேவு நடவடிக்கை

# யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கு முரணானது

## கண்காணிப்புக் குழு தெரிவிப்பு

(கொழும்பு)

**ஆளில்லா விமானங்களை பயன்படுத்தி உளவு நடவடிக்கையில் ஈடுபடுவது யுத்தநிறுத்தத்திற்கு முரணானது என போர்நிறுத்த கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளது. வேவு நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது ஆளில்லா வேவு விமானம் ஒன்று நேற்று முன்தினம் வன்னியில் வீழ்ந்து நொருங்கியது. அது குறித்து கருத்துத் தெரிவித்த கண்காணிப்பு குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலப்ஸ் டொட்டிர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

வேவு விமானம் விழுந்து நொருங்கியமை குறித்து விடுதலைப்புலிகள் தமக்கு அறிவித்ததாகவும் அவர் கூறினார்.

வேவு விமானங்கள் மூலம் தமது பகுதிகளை இராணுவம் வேவு பார்ப்பதாக பல தடவை விடுதலைப்புலிகள் குற்றஞ்சாட்டியிருந்தனர். எனினும் அக்குற்றச்சாட்டை இராணுவதரப்பு மறுத்து வந்தது.

ஆனால் தற்போது அவ்விவகாரம் அம்பலத்துக்கு வந்துள்ளது. இவ்வாறான இராணுவத்தின் வேவு நடவடிக்கையானது போர் நிறுத்த உடன்படிக்கைக்கு முரணானது என அவர் கூறினார்.

வவுனியா விமானப்படைத்தளத்தின் கட்டுப்பாட்டில் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது காணாமல் போனதாக இராணுவத்தினரால் கூறப்பட்ட ஆளில்லாத வேவு விமானம் விழுந்ததாகக்கூறப்படும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இடத்தை யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினர் நேற்றுச் சென்று பார்வையிட்டனர்.

இத்தகவலினை கொழும்பில் உள்ள அக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதே வேளை வான்பரப்பில் ஆளில்லா விமானத்தை பயிற்சி நடவடிக்கைக்காக ஏவியது யுத்த நிறுத்த மீறல் அல்ல என்று அரசு விளக்கம் அளித்துள்ளது. கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த (10ஆம் பக்கம் பார்க்க)

## கோபியின் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

யாழ்ப்பாணம் பொலிஸ் பொறுப்பதிகாரி சாள்ஸ் விஜயவர்த்தனவின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட வீரபாண்டியன் கோபியை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிபதி குசலா சரோஜினி வீரவர்த்தன மீண்டும் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது அறிக்கையொன்றை சமர்ப்பித்த பொலிஸார் அடையாள அணிவகுப்புத் தொடர்பான அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் அவரின் ஆலோசனை கிடைத்தவுடன் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

சந்தேக நபரான கோபியை பாதுகாப்புக் காரணங்களுக்காக அன்றைய தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட வில்லை. இதையடுத்து சிறைச்சாலைக்கு சென்று சந்தேக நபரின் நிலைமையை ஆய்வு செய்த நீதிபதி சந்தேக நபரை எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று எடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறு அவர் உத்தரவிட்டார். (ச-4)

## தேர்தல் பாதுகாப்புக்கு 55 ஜேர்மன் நாய்கள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் பாதுகாப்புக்காக ஜேர்மனியில் இருந்து 55 மோப்ப நாய்களை அரசாங்கம் இறக்குமதி செய்துள்ளதென்று கண்டி பொலிஸ் பொறுப்பதிகாரி செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறியதாவது, ஜேர்மனியில் இருந்து வெடிகுண்டுகளை மோப்பம் பிடித்து கண்டறியும் 55 பயிற்சி பெற்ற நாய்களை இறக்குமதி செய்துள்ளோம். இந்த நாய்கள் பெல்ஜியம் மலோனை இனங்களைச் சேர்ந்தவை.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக்கூட்டங்களை நடாத்தும் இரு பிரதான வேட்பாளர்களின் அனைத்துக் கூட்டங்களுக்கும் இந்த நாய்கள் கொண்டு செல்லப்படும். இந்த நாய்களுக்கு பதப்படுத்தப்பட்ட உணவுகளையும் ஏற்பாடு செய்துள்ளோம் என்றார் லான் செனவிரட்ண.

தேர்தலில் அரசியல் உள்நோக்கங்களுடன் இருபிரதான வேட்பாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படக்கூடும் என்பதால் இருவருக்குமான பாதுகாப்புக்கள் அதிகரிக்கப்பட்டிருப்பதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ கூறியுள்ளார். (ச-8)

## பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களுக்கான பாதுகாப்பை அதிகரிக்குமாறு பாதுகாப்பு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணித்துள்ளார்.

வேட்பாளர்களின் பாதுகாப்பு குறித்து ஆராய்ந்த விசேட குழுவின் அறிக்கையடுத்து இப் பணிப்புரையை ஜனாதிபதி விடுத்துள்ளார்.

இதனையடுத்து இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கும் மேலதிகமான பாதுகாப்பு ஆளணிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவில் இருந்து பயிற்றப்பட்ட ,அனுபவம் வாய்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பிரதமரின் பாதுகாப்பிற்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை பிரதமமந்திரி பதவிக்குப் போட்டியிடும் இரண்டு பிரதான அரசியல் வாதிகளுக்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சார்பில் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-8)

## பிரதமர் மகிந்தவின் சிந்தனைகள் தமிழர் மீது திணிக்கப்படும் நிந்தனைகள்

### ஈழவேந்தன் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

அது எம்மக்கள் மீது திணிக்கப்படும் நிந்தனையென யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம.க.ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.

மகிந்தவின் சிந்தனைகள் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். தமிழ் ,மலையக மற்றும் முஸ்லிம் மக்கள் மகிந்தவின் சிந்தனையை நிராகரித்துள்ளனர்.

ஜே.வி.பியினதும் ,ஹெல உறுமயவினதும் சிந்தனைகளையே அவர் தனது சிந்தனையாக வெளியிட்டுள்ளார் என ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மகிந்தவின் விஞ்ஞாபனத்தை எதிர்த்து வந்த ஜனாதிபதி தனக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்குமிடையில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை என நேற்று முன்தினம் கூட்டமொன்றில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

அத்துடன் தனது சிந்தனைகளையே மகிந்தவும் வெளியிட்டுள்ளார். இவ்வாறான கருத்துக்கள் தமிழர்களுக்கு எதிரானதாகவே உள்ளதாக ஈழவேந்தன் மேலும் தெரிவித்தார். (ச)

## பஹ்ரெய்ன் நாட்டில் விபத்து யாழ்ப்பாண இளைஞன் மரணம்

(கொழும்பு)

பஹ்ரெய்ன் நாட்டு சீமெந்துத் தொழிற்சாலையில் இடம் பெற்ற விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். உயிரிழந்தவர் சிவகுமார் (வயது 25) எனத் தெரிவிக்கப்பட்டது. பஹ்ரெய்ன் நாட்டு சீமெந்துத் தொழிற்சாலையில் சல்மாபாத்தில் உள்ள டெல்மான் ரெடிமிக்ஸ்ட் கொங்கிறீட் என்ற நிறுவனத்தில் கடந்த 3 ஆண்டுகளாக சிவகுமார் பணியாற்றி வந்தார்.

சம்பவ நாளன்று சீமெந்து கலவை இயந்திரத்தினுள்ளே இறங்கி துப்புரவுப்பணியைச் சிவகுமார் செய்து வந்தார். அப்போது அங்கு வந்த மற்றொரு ஊழியர் இயந்திரத்தீற்குள் சிவகுமார் இருப்பதை அறியாமலேயே அந்த இயந்திரத்திற்கான ஆளியை இயக்கியுள்ளார்.

இதில் படுகாயமடைந்த சிவகுமார் சல்மானிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். தலை மற்றும் உடலில் படுகாயங்களுடன் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட சிவகுமார் கடந்த செவ்வாய்க்கிழமை அன்று உயிரிழந்துள்ளார். (ச-8)

## வேவு விமானப் பறப்பிற்கு விடுதலைப்புலிகள் குற்றச்சாட்டு

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் இலங்கை விமானப்படையின் வேவு விமானத்தின் பறப்பு யுத்த நிறுத்த மீறலாகுமென விடுதலைப்புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுபாட்டில் உள்ள பகுதிகளை ஆளில்லாத வேவுவிமானத்தின் மூலம் இராணுவத்தினர் வேவு பார்த்துள்ளமை இவ்விமானம் விழுந்ததில் இருந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் கவனத்திற்கு நேற்று தாங்கள் கொண்டு வந்திருப்பதாக வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ஞானம் தெரிவித்தார். (ச-4)



கடந்த வருடம் டிசம்பர் 26 ஆம் திகதி இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின் பின்னர் உலகில் உள்ள அனைவரினதும் கவனத்தை ஈர்த்த அபிலாஷ் (சுனாமி 81) தனது முதலாவது பிறந்த நாளை நேற்றுக் கொண்டாடினார். (ச-8)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கடவுளை நம்பினோர்

## வெள்ளிநற்சிந்தனை

# கைவிடப்படார்

கடவுள் நம்பிக்கை என்பது எமது மனதின் திட நம்பிக்கையாக விளங்கும் இறைபக்தியாகும். உறுதியான தெய்வ நம்பிக்



கையினாற் சாதிக்கமுடியாதது இவ்வுலகில் எதுவேனும் இல்லையெனலாம். தெய்வ நம்பிக் கையின் உறுதியான நிலையில் எதையும் சாதிக்கலாம் என்பது எமது பழைய புராணங்கள், இதிகாசங்கள் மூலம் நன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

என்றும் பதினாறு வயதுடைய மார்க்கண்டேயர் தை அமாவாசை நாளில் அபிராமிப்பட்டர் சரபோஜி மன்னனுக்கு பௌர்ணமிநிலவைக் காட்டியது. நரியைப் பரியாக்கிய மாணிக்க வாசக சுவாமிகட்காக சிவபிரான் தானே திருவருள்காட்டி ஆட்கொண்டது. செம்மனச் செல்விக்காக கூலியாளாக வந்து இறைவனே பிரம்படி பட்டது. சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் தோழனாக வந்து உதவியது போன்ற பல்வேறு புராணக் கதைகள் கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

ஆயிரம் மக்கள் இறைவழிபாட்டிலும், மனம் ஒருமித்த இறை நம்பிக்கையிலும் தம்மை அர்ப்பணிப்பது அரிதாகவே உள்ளது. இதற்குக் காரணம் உலக ஆசாபாசங்களிலிருந்து மக்கள் தம்மைக் கட்டுப்படுத்த முடியாது தவிப்பதேயாகும்.

உலகியல் பாசபந் தங்களிலிருந்து எம்மை நாம் கட்டுப்படுத்தி ஒரு நிலைப்பட்ட மனத்துடன் இறைவழிபாடுகள் செய்வதன் மூலம் விதியை மதியால் வெல்லக் கூடிய இறையுணர்வை நாம் பெற்றுக் கொள்ளலாம்.

மார்க்கண்டேயர், அரிச்சந்திரன், நளமகாராசன் மற்றும் நாயன்மார்கள், சித்தர்கள், முனிவர்கள் போன்ற பலதரப்பட்ட இறை நம்பிக்கையுடையவர்களது பலவிதமான உலகியல சோதனைகளும் சோதனைகளால் ஏற்பட்ட வேதனைகளும் இறுதியிற் கிடைத்த பேரின்பப் பெருவாழ்வும் என்றும் நாம் எடுத்து நோக்கக் கூடியதாகவுள்ளது.

உலகவாழ்வில் எத்தனை எத்தனை சோதனைகள், வேதனைகள் ஏற்பட்டபோதும் சிறிதும் தளராது "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" எனும் திடசித்தத்துடன் வாழ்ந்து இறையருளாற் பேரின்பப் பெருவாழ்வைப்பெறலாம் என்பதை எடுத் துக்காட்டியவர்கள் பெருமகான்களாவர். உலகியல் வாழ்வில் துன்பங்கள் வருவது எங்கள் மனத்தினைப் பக்குவப் படுத்தவே என்பதை ஆன்றோர் நமக்கு நன்கு தெளிவுபடுத்தியுள்ளனர்.

சுடச்சுடரும் பொன்போல் ஒளி
விடும் துன்பம்
சுடச்சுட நோக்கிற்பவர்க்கு
எனவும்
கூற்றம் குதித்தலும் கைகூடும்
நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்டவர்க்கு
எனவும்
வரும் குறட்பாக்கள் திடசித்தம் கொண்ட இறை நம்பிக்கை யாளருக்கு ஏற்படக்கூடிய துன்பங்கள் அவர்கள் மனதைப் பக்குவப்படுத்தி தெய்வீக ஒளியை வீசச் செய்யும் என்பதை அழகாக எடுத்துக்கூறுகின்றது.

எனவே தளராத மன உறுதியுடன் இறைவனை நாம் நம்புவோமாயின் ஒருபோதும் இறைவன் எம்மைக் கைவிடார் என்பதை உறுதியுடன் மனத்திருத்தி ஒருப்பட்ட மனத்துடன் இறை வழிபாடு செய்வோம். □

**நீரவை மணி**

## ஆசிய-பசுபிக் வலய நீதிபதிகள் மாநாடு

# கொழும்பில் நவ.21,22 இல்

(கொழும்பு)

ஆசிய பசுபிக் வலய நீதிபதிகள் கலந்துகொள்ளும் மாநாடு ஒன்று எதிர்வரும் நவம்பர் மாதம் 21ஆம் 22ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இயற்கை அனர்த்தம் ஒன்று ஏற்பட்ட பின்னர் அவ்வாறான அனர்த்தத்தினால் பாதிக்கப்படுவோரின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பிலான சட்டங்கள் உருவாக்குவது மற்றும் அதன் அன்றாட நிலைமைகள் என்பன குறித்தும் இந்த மாநாட்டில் ஆராயப்படவுள்ளது.

இந்த மாநாட்டை இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு மற்றும் மனிதவுரிமை ஆணைக்குழு என்பன இணைந்து ஒழுங்குசெய்துள்ளன.

மேலும் இந்த மாநாட்டில் சுனாமி பேரலை தாக்கத்தின் பின்னா இலங்கை அதனை எதிர்கொள்ள மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டோரின் உரிமைகளை பாதுகாப்பது குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளது.

அத்துடன், இந்த விடயங்கள் தொடர்பாக கொள்கைகள் தயாரிக்கப்படுவது குறித்து நீண்ட கலந்துரையாடல் ஒன்றும் இம் மாநாட்டில் நடாத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ரு-8)

# தேர்தல் கடமை உத்தியோகத்தர்கள் செல்போன்கள் வைத்திருக்கத் தடை

## மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை

(வடமராட்சி)

ஜனாதிபதித் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள உத்தியோகத்தர்கள், வாக்கெடுப்பு இடம்பெறும் நிலையங்கள், வாக்குகளை எண்ணும் நிலையங்கள், இணைப்பு நிலையங்கள் என்பவற்றில் தேர்தல் கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் எந்தக் காரணம் கொண்டும் கையடக்க தொலைபேசிகளை வைத்திருக்க முடியாது என அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் ரி.எம்.எல். தென்னக்கோன் அறிவுறுத்தியுள்ளார்.

இந்தவிதிகளை மீறும் தேர்தல் உத்தியோகத்தர்களுக்கு எதிராக தேர்தல் சட்டவிதிகளுக்கு உட்பட்ட வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அம்பாறை மாவட்டத்தில் 391 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இங்கு தேர்தல் கடமையில் ஈடுபடும் சகல உத்தியோகத்தர்களும் நீதி நேர்மையான முறையில் தேர்தல் நடைபெற பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (ரு-8)

## இராசிபலன்

21.10.2005
(ஐப்பசி 4, வெள்ளிக்கிழமை)
சதுர்த்தி பிற்பகல் 4.09 மணிவரை
ரோகிணி முன்னிரவு 6.55 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்
முதலாம் ஐப்பசி வெள்ளி

| | |
|---|---|
| மேடம் | அதிக செலவு, மனோசங்கடம், ரோக நிலை, முயற்சி தாமதம். |
| இடபம் | வெகுமானம், மாதர் நட்பு, சயன சுகம், முயற்சி கைக்கூடும். |
| மிதுனம் | சோம்பல் நிலை, இடமாற்றம், காரிய தாமதம், கற்பனை மிகுதி. |
| கடகம் | நண்பர்கள் சந்திப்பு, சயன சுகம், நல்ல முயற்சி, போசன சுகம். |
| சிங்கம் | பிரபுத்தனம், இஷ்டகீர்த்தி, நன்கொடை, மனமகிழ்ச்சி. |
| கன்னி | சரீரப்பிரயாசை, வயிற்று வலி, பொருள் விரயம், காரிய தாமதம். |
| துலாம் | எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், பணவிரயம், வாகன பயம். |
| விருச்சிகம் | குடும்ப சுகம், எடுத்த காரியம் கைக்கூடும், தெய்வ தரிசனம், நண்பர்கள் உதவி. |
| தனுசு | காரிய நன்மை, தெய்வ சிந்தை, சுவாரஸ்யம், புதிய தகவல். |
| மகரம் | புத்திரரால் கவலை, ரோக நிலை, முயற்சி தாமதம், அதிகாரம். |
| கும்பம் | வாகன சுகம், மனச்சஞ்சலம், வேலைச் சுமை, காரிய தாமதம். |
| மீனம் | தொழில் நன்மை, குடும்ப சுகம், பண வருவாய், தெய்வ தரிசனம். |

வளவன்

பழைய நோட்படி கணிப்பிடப்பட்டது.

# இனவாதத்தின் புதிய வடிவமாக மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம்

## -ம.ம.மு.தலைவர் பெ.சந்திரசேகரன்

(கொழும்பு)

மஹிந்தவீன் தேர்தல் விஞ்ஞாபனம் இனவாதத்துக்கு புதிய வடிவம் கொடுத்துள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

தமிழர்கள் அடக்கப்படுவதையும் அவர்களின் உரிமைகள் மறுக்கப்படுவதையும் உலகுக்கு எடுத்துக் காட்ட இந்த தேர்தல் விஞ்ஞாபனமே போதுமானதாக இருக்கும்.

அரை நூற்றாண்டு காலமாக தமது உரிமைகளுக்காகப் போராடி வரும் தமிழ் இனத்தை ஒற்றுமையாட்சிக்குள் அடக்க முனைவது தமிழர்கள் சரணாகதி அடைய வேண்டுமென்ற ஆணவத்தின் அடையாளமாகவே நாம் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தைப் பார்க்கின்றோம்.

சிங்களவர் பெரும்பாண்மையாக உள்ள நாட்டில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்படுமானால் அதன்போது தமிழர்களுக்குச் சார்பாக சிங்களவர்கள் செயற்படுவார்கள் என எதிர் பார்க்க முடியாது.

இந்த நிலையில் தமிழர்களுடன் சர்வஜன வாக் கெடுப்பு ஒன்றை நடாத்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் முன்வருவார்களாக விருந்தால் தனிநாடே தமக்குத் தேவையென அவர்கள் ஒட்டுமொத்தமாக வெளிப்படுத்துவார்கள் என்றார்.

(ரு-8)

# பட்டதாரிகளுக்கு நியமனம்

## -திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கான விசேட செயற்திட்டமொன்றை தமது ஆட்சியில் அமுல்படுத்தப்படுமென்று ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார்.

வேலையற்ற பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகளோடு நேற்று முன்தினம் நடாத்திய சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போது பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகள் நிரந்தர சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்றும் அவர் மேலும் உறுதியளித்துள்ளார். (ரு-8)

# கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட அதிபர்களைத் தவறாது சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.(ரு-9)

# பெண்களுக்கான தீர்வுத் திட்டம் குறித்து சிங்கள பெண்கள் அமைப்பு ஆராய்வு

(கொழும்பு)

நாட்டிற்கான தலைவர் ஒருவரை தேர்ந்தெடுக்கும்போது பெண்கள் கட்டாயமாக தமது கருத்தை தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென சிங்கள பெண்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றிலேயே இந்தக் கருத்துத்தெரிவிக் கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது கொள்கைப் பிரகடனங்களில் பெண்களின் மேம்பாட்டிற்காக முன்வைத்துள்ள யோசனைகள் குறித்து ஆராய பெண்பலம் எனும் அமைப்பினால் கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வாக்கை பயன்படுத்த முடியாது என ஒருவர் கூறுவராயின் அவ்வாறு கூறக்கூடாது என்று கூறும் கடமை எமக்கு உள்ளது.

எனினும் நாட்டின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களில் இணைய அனைத்து பெண்களும் பங்குதாரராக மாற வேண்டும் அவ்வாறாயின் நாம் எமது வாக்கை உபயோகிக்க வேண்டும்.

பெண்களின் முன்னேற்றத்துக்கு பாடுபடும் தலைவர் ஒருவரையே தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (ரு-8)

# இராணுவ வீரர்களுக்கு 50 ஆயிரம் புதிய வீடுகள்

## மஹிந்த அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டின் இறைமையையும் பிரதேச தன்னாதிக்கத்தையும் பாதுகாக்கும் வகையிலான புதியதொரு பாதுகாப்புக் கொள்கை நடைமுறைக்குக் கொண்டுவரவுள்ளத்தாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அப் புதிய திட்டத்தின் மூலம் இராணுவ வீரர்களுக்கு 50 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, போதனை மற்றும செயல்முறைப் பாடநெறிகளைப் போதிக்கும் விதத்தில் புதிய தேசியப் பாதுகாப்புப் பல்கலைக்கழகமும் உருவாக்கப்படவுள்ளது.

பயங்கரவாதம் சம்பந்தமான அறிவையும், தகவல்களையும் பாிமாறிக் கொள்வதற்கென சீனா போன்ற நாடுகளுடன் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளப்படவுள்ளன.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதில் ஓர் அங்கமாக இடமாற்றங்கள், பதவியுயர்வுகள் என்பவற்றை ஒழுங்கமைப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

பாதுகாப்பு அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்வதற்கென விசேட குழுவொன்றும் நியமிக்கப்படவுள்ளது. (து-7)

# வடமாகாணத்தின் சிறந்த வங்கியாக பரு.இலங்கை வங்கிக் கிளை

(பருத்தித்துறை)

இலங்கை வங்கியின் வடமாகாண வங்கிச் சேவையில் பருத்தித்துறை இலங்கை வங்கிக்கிளை 2004ஆம் ஆண்டுக்கான அதிசிறந்த வங்கிக் கிளையாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தற்போது இலங்கை வங்கியின் யாழ்.மாவட்ட முகாமையாளராகப் பணியாற்றும் ஏ.ரி.ஏ.தேவராஜா அக்காலத்தில் இலங்கை வங்கிப் பருத்தித்துறைக் கிளை முகாமையாளராகக் கடமையாற்றினார்.

இம்மாத இறுதியில் கொழும்பில் நடை பெறவுள்ள விழாவிலே முகாமையாளர் ஏ.ரி.ஏ.தேவராஜா இச்சாதனைக்காகப் பாராட்டப்படவுள்ளார். (து-52)

# செயற்திறனாளர் பயிற்சித் திட்டம்

(கொழும்பு)

நாட்டின் சேவைத்துறையில் செயற்திறனை அதிகரிப்பதற்கான தேவை ஏற்பட்டுள்ளதாக தொழில அமைச்சர் அதாவுட சென்விரத்ன தெரிவித்துள்ளார்.

செயற்திறனை அதிகரிக்கும் நோக்கில் அவர்களுக்கு அறிவூட்டி திறமைகளையும், செயற்பாடுகளையும் மேம்படுத்த வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆசிய செயற்திறனாளர்களின் பயிற்சித் திட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பங்களாதேஷ், சீனா, இந்தோனேஷியா, கொரியா, தாய்லாந்து, நேபாளம், பாகிஸ்தான் உட்பட 20க்கும் அதிகமான நாடுகள் இந்தப் பயிற்சித் திட்டத்தில் பங்குபற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-7)

# புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை மாணவர்கள் 8 பேர் சித்தியடைந்துள்ளனர். சித்தியடைந்த மாணவர்களின் விபரம் வருமாறு,

சி.சகிலா-159, ந.சாயீசன்-141, இ.கீர்த்தனா-140, கோ.பவித்ரா-140, ப.தனுசன்-139, சு.சிறீ கௌரி- 130, ப.தன்சிகா-127, அ.யாழினி-125

இதேவேளை,

நல்லூர் ஆனந்த வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவனான ஜெயரஞ்சன் சுஜீவ் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 158 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். மாவட்ட நிலையில் அவர் 25 ஆம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ([illegible]-9)

# புரிந்துணர்வு ஒப்பந்தம் முஸ்லிம்களின் அடிமைச் சாசனமா? - சேகு இஸ்ஸதீன்

(கொழும்பு)

புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பது முஸ்லிம் அடிமைச் சாசனம் என்றும் இந்தச் சாசனம் திருத்தி எழுதப்பட வேண்டுமானால் முஸ்லிம்கள அனைவரும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க வேண்டும் என்றும் அமைச்சர் சேகு இஸ்ஸதீன தெரிவித்துள்ளார்.

'சமகால அரசியலில் ஊடகவியலாளர்கள்' என்ற தலைப்பில் ஒலுவில் சுற்றுலா விடுதியில் சமீபத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கருத்தினை வெளியிட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதன் மூலம்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களுக்கு சாியான இடத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து-7)

## மண்டலாபிஷேகப் பூர்த்தி

வட்டுமேற்கு தெக்கணப்பாய் ஸ்ரீ மங்களாம்பிகா சமேத ஸ்ரீ மஹாலிங்கஸ்வாமி தேவஸ்தான மண்டலாபிஷேக பூாதத நவோத்தர ஸஹஸ்ர சங்காபிஷேகம் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (ற-9)

## மண் அணையை உடைக்கும் விஷமிகள்

(வல்வெட்டித்துறை)

தொண்டைமனாறு ஆற்றுப் பகுதியில் பாலப் புனரமைப்பு வேலைகளின் போது கடல் நீர் உட்புகாமல் பெரிய கடற்கரை எனனும் முகத்துவாரத்தில் அமைக்கப்பட்ட மண் அணை விஷமிகளால் உடைத்துச் சேதமாக்கப்பட்டதால் பாலப் புனரமைப்பு வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இச்சம்பவம் குறித்து வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதுடன் உதவி அரசாங்க அதிபருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விதம் மண் அணை உடைக்கப்படுவது இரண்டாவது தடவை எனக் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர். (து-32)

## பருவமழை ஆரம்பம்

# பருவகால நெற்செய்கைக்கான தயார்ப்படுத்தலில் விவசாயிகள்

(பொன்னாலை)

யாழ்.குடாநாட்டில் பருவமழை ஆரம்பித்துள்ளதையடுத்து விவசாயிகள் பருவகால செற்செய்கைக்கான தயாாப்படுத்தல்களில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய பிரதேசங்களைச் சோந்த விவசாயிகள் வரம்பு கட்டுதல், நிலம் பண்படுத்துதல், நெல் விதைத்தல் போன்றவற்றில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

குடாநாட்டில் பருவமழை கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டதால் இம்முறை மிகவும் காலம் (மாதம்) குறைந்த நெல்லையே விதைக்க வேண்டியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ற-49)

# கிராமங்களுக்கு பொதுத் தொலைத் தொடர்பு ஏற்படுத்த பொ.தொ. ஆணைக்குழு நடவடிக்கை

கிராமியப் பிரதேசங்களில் பொதுத் தொலைத்தொடர்புகளை மேம்படுத்த தொலைத் தொடர்பு ஆணைக்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஏற்கனவே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோதும் 2004ஆம் ஆண்டின் இறுதிவரை சுமார் 260 கிராமங்களுக்கு மாத்திரமே தொலைத் தொடர்பு வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இந்தச் சேவையை மேம்படுத்த தொலைத் தொடர்பு ஆணைக்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(து-7)

## விவசாயக் கிணறுகள் புனரமைப்பு

(வல்வெட்டித்துறை)

கெருடாவில் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் வேண்டுகோளையடுத்து கெருடாவில் வடக்குப் பகுதியில் ஆறு விவசாயக் கிணறுகளைப் புனரமைத்துக் கொடுக்க 'சேவாலங்கா' நிறுவனம் முன்வந்துள்ளது. (து-32)

# பரு.,வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ரூ.40 இலட்சம் செலவில் கட்டடம்

(பருத்தித்துறை)

40 இலட்சம் ருபா செலவில் பருத்தித்துறை வீதிகள அபிவிருத்தித திணைக்களத்திற்கு புலோலியில் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கான நிதியினை நிக்கொட நிறுவனம் வழங்கியுள்ளது. புலோலி மந்திகையில் உள்ள முடிக்குரிய காணியைக் காணி ஆணையாளர் இக்கட்டடத்தை நிர்மாணிப்பதற்கென வீதிகள் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கையளித்திருந்தார். கட்டட நிர்மாண வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

பருத்தித்துறை வீதிகள் அபிவிருத்தித் திணைக்களம் தற்போது கரவெட்டியில் உள்ள த்னியார் கட்டடமொன்றில் இயங்கி வருகின்றது. இவ்வலுவலகம் சாவகச்சேரி, கோப்பாய், மருதங்கேணி, கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட வீதிகள் அபிவிருத்தித் திணைக்கள நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-52)

## விமான நிலையத்தில் வல்லுறவு;

# சந்தேக நபர்கள் ஐவருக்கு 28 வரை விளக்கமறியல்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குவைத் செல்லச சென்ற இளம்பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பாக கைது செயயப்பட்ட 5 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணைகள் இடம்பெறுவதாகவும் இதுகுறித்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாகவும் விமான நிலைய மற்றும் விமான சேவை நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 10ஆம் திகதி குவைத் நோக்கி செல்வதற்காக இந்தப் பெண் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்துள்ளார். இங்கு விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளினால் அப்பெண் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

சர்வதேச விமான நிலையத்தில இவ்வாறான சம்பவம் ஒன்று இடம்பெற்றமை வருத்தத்தை தருவதுடன் இச்சம்பவம் மிகவும் அபாயகரமான ஒன்றாகும்.

இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென ஜனாதிபதியிடம் கோருகின்றேன். குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

விசேடமாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பெண்களின் பாதுகாப்பு குறித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் குறிப்பிட்டார். (ற-8)

## இருகுழந்தைகளின் சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

தலவாக்கலை தோட்டப் பகுதியில் உள்ள தொழிற்சாலைக்கு அருகிலிருந்து இரண்டு குழந்தைகளின் சடலங்களை நேற்று முன தினம் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அன்றைய தினமே பிறந்ததாகக் கருதப்படும் ஆண் மற்றும் பெண் குழந்தைகளின் சடலங்களையே பொலிஸார் மீட்டுள்ளனர். எனினும், இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-8)

# ஜேர்மன் உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர்கள் யாழ்.மாவட்ட வீரர்களுக்கு பயிற்சியளிப்பர்

## நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன

(பொன்னாலை)

யாழ்.மாவட்ட உதைபந்தாட்டத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் முன்வந்துள்ளது.

இதன்படி ஜேர்மனியிலிருந்து உதைபந்தாட்டத் துறையில் நன்கு நிபுணத்துவம் பெற்ற பயிற்றுவிப்பாளர்களை அழைத்து யாழ். மாவட்ட வீரர்களுக்கு பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை உதைபந்தாட்டப் பயிற்சி முகாமொன்று யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

நான்கு தினங்கள் நடைபெறவுள்ள இப்பயிற்சி முகாமில் ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்றுவிப்பாளர்கள் கலந்துகொண்டு யாழ். மாவட்ட உதைப்பந்தாட்ட வீரர்களுக்கு பயிற்சி வழங்கவுள்ளனர். (ற-49)

## மினிபஸ் சேவை

ஊர்காவற்றுறை தனியார் போக்குவரத்து சேவை கடந்த 15ஆம் திகதியிலிருந்து பஸ் நிலையத்திலிருந்து பண்ணைப் பாலம் வரை அரை மணித்தியாலத்துக்கு ஒருதடவை காலை 6.00 மணியிலிருந்து நடைபெறுவதாக நேரக்கணிப்பாளர் அன்ரன் தெரிவித்துள்ளார். (ற)

# சட்டவிரோத ஆயுத தயாரிப்பிடம் பொலிஸாரால் சுற்றிவளைப்பு

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் சட்டவிரோதமாக ஆயுதம் தயாரிக்கும் இடமொன்றை கடந்த செவ்வாயன்று சுற்றிவளைத்த பொலிஸார் உள்ஞரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளைக் கைப்பற்றியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (து-8)

# மஹிந்தவின் தேர்தல் பிரசாரத்தில் அரச வாகனங்கள் என முறைப்பாடு

(கொழும்பு)

அரசாங்கத்தின் வாகனங்களையும், சொத்துக்களையும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்திற்கு சொந்தமான 8 வாகனங்களையும், உடைமைகளையும் கூட்டமைப்பு தேர்தல் பிரசாரதற்கு பயன்படுத்துவதாக ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் ஆணையாளாடம் முறைப்பாடு செய்துள்ளது.

இந்த விடயம் குறித்து தேர்தல் ஆணையாளர் மற்றும் மின்வலு எரிசக்தி அமைச்சர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக பொலிஸ ஆணைக்குழுவின் தலைவர் இலஞ்ச மற்றும் மோசடி விசாரணை ஆணையாளர் போன்றோருக்கும் முறைப்பாடு செய்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் தெரிவித்தார்.

தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொதுச் சொத்துக்கள் பயன்படுததப்படுவது தேர்தல் சட்டங்களை மீறும் செயல் என்பதால் இந்த வடயம் தொடர்பாக பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவேண்டுமென்று ஐககிய தேசியக் கட்சி கேட்டுக்கொண்டுள்ளது. (து-9)

# இன்று ஒரு தகவல்

## அகத் தூய்மை

எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும் அது தான் நல்லது என்றார் ஒருவர். "நான் அப்படித்தான் சார் இருக்கிறேன். தினம் இரண்டு வேளை குளிக்கிறேன்" என்றார். இன்னொருவர் உடல் மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது சார் மனமும் சுத்தமாக இருக்கவேண்டும் என்றார். அவர் மனதை சுத்தப்படுத்த என்ன சோப்போடலாம் என்றார். இவர் ஆன்மீகம் என்ற சோப்தான் அதற்குப் பொருத்தம் என்றார் அவர்.

ஆன்மாவை மேம்படுத்தும் ஒரு முயற்சி தான் ஆன்மீகம். அந்த முயற்சி எப்படிச் செய்வது,மனதுக்குள் குந்தியிருக்கும் வேண்டாத விருந்தாளிகளை வெளியேற்ற வேண்டும். அப்படிப்பட்ட வேண்டாத விருந்தாளிகளில் ஒருவர் பொறாமை. இவர் நமது மனதுக்குள் இருக்கும் வரை நாம் நிம்மதியாக இருக்க முடியாது.

ஒரு குருநாதர் இருந்தார். அவரிடம் இரண்டு சீடர்கள் இருந்தார்கள். இரண்டு பேரும் ஆரம்பத்தில் ஒருவருக்கொருவர் நன்றாகத்தான் பழக்கிக்கொண்டிருந்தார்கள். ஆனாலும் என்னவோ தெரியவில்லை. கொஞ்ச நாளில் அந்த இரண்டு பேரில் ஒருவனில் பொறாமை என்ற விருந்தாளி வந்து உட்கார்ர ஆரம்பித்து விட்டார். அந்த சீடனும் அதற்கு இடம் கொடுத்து விட்டான் குருவிடம்தான் நல்ல பெயர் வாங்கவேண்டும் என்றும் தன் நண்பன் கெட்டபெயர் வாங்க வேண்டும் என்றும் அவனுக்கு ஒரு ஆசை உண்டானது. என்ன செய்யலாம் என்று யோசித்தான்.

ஒரு நாள் விடியற்காலையில் எழுந்திருந்தான். நேராக குருவிடம் போய் அவன் முன்பு நின்றான். "குருவே! என்னைப்பாருங்கள் நான் எவ்வளவு சீக்கிரமாக எழுந்து குளித்து முடித்து விட்டு உங்களை வணங்குவதற்காக வந்து நிற்கிறேன். ஆனால் அவன் இன்னமும் கண் விழிக்கவில்லை.இன்னும் தூங்கிக் கொண்டே இருக்கிறான்" என்றார். குருநாதர் நிமிர்ந்து பார்த்தார். "அப்படியா? அப்படி என்றால்... நீயும் கூட அவனை மாதிரியே தூங்கியிருந்தால் நன்றாக இருந்திருக்குமே" எனறார் மிகவும் பொறுமையாக.

"என்ன இது? நான் எவ்வளவு தீவிரமாக ஒரு விடயத்தைச் சொல்கிறேன் எனது குருநாதர் மிகப் பொறுமையாக இப்படிச் சொல்கிறாரே" என்று நினைத்து ஆச்சரியமாக அவரைப்பார்த்தன். குருநாதர் சொன்னார் "ஆமாம் நீயும் தூங்கிக்கொண்டிருந்தால் அடுத்தவனைப் பற்றி குறை சொல்வதற்கு இங்கே வந்திருக்க மாட்டாய் அல்லவா அதனால்த்தான் சொன்னேன்" என்றார். சீடன் யோசிக்க ஆரம்பித்தான். அர்த்தம் புரிந்தது. உடனே பொறாமையை மனதில் இருந்து தூக்கி எறிந்தான். மனம் சுத்தமாயிற்று.

மனதிற்குள் இருந்து விரட்ட வேண்டிய இன்னொரு விருந்தாளி கோபம். "சினம் தன்னையே கொன்றுவிடும்" என்கிறார் வள்ளுவர். கோபத்திற்கு மனதில் இடமே கொடுக்காத சில பெரியவர்களும் உண்டு. குருநாதர் என்று ஒருவர் இருந்தார்.அவர் ஒரு சமயம் கோதாவரி நதியில் போய் குளித்து விட்டு திரும்பி வந்துகொண்டிருந்தார். வரும் வழியில் ஒரு மரத்தின் மேலே உட்கார்ந்திருந்த ஒருவர் அவர் மேலே துப்பி விடுகிறான். இவர் உடனே திரும்பிப்போய் மறுபடியும் குளித்து விட்டு -வருகிறார். அப்போதும் துப்பி விடுகிறான். அவர் கோபமே படவில்லை பேசாமல் மறுபடியும் போய் குளித்து விட்டு வருகிறார்.

இப்படிப்பல தடவை நடந்துகொண்டே இருந்தது. ஒரு கட்டத்தில் அந்த ஆள் தோற்றுப்போய் அவரது காலிலேயே வந்து விழுகிறான். ஆச்சரியப்பட்டு கேட்கிறான். "அது எப்படி? நங்கள் கோபப்படாமல் இருந்தீர்களே அது எப்படி?" என்றான். அதற்கு அந்தப் பெரியவர் சொல்கிறார் "நான் கோபப்பட்டிருந்தால் என் மனம் அசுத்தமாகியிருக்கும். உடல் அசுத்தமானால் குளித்து சுத்தப்படுத்திக்கொள்ளலாம். மனதை அப்படி சுத்தப்படுத்த முடியாது" என்றார். ஆகக்கூடி மனம் அசுத்தமாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது நமது கடமை.

மனதை அசுத்தப்படுத்தும் இன்னொரு விடயம் சுயநலம். "ஒரு சுயநலவாதி ஆற்றில் விழுந்து சுழலில் சிக்கிக் கொண்டார். இன்னொரு சுயநலவாதி கரையிலிருந்து இதைப் பார்த்தார். ஒரு கயிற்றை தூக்கிப் போட்டு அதைப் பிடித்துக்கொள்ளச் சொல்லி கரையில் இழுத்து காப்பாற்றினார். அவர் கரையில் ஏறியவுடன் இவரைப் பார்த்து என்னைக் காப்பாற்றுவதற்காக உங்களுக்காக 50 காசு கொடுக்கலாம் என்று பார்க்கிறேன்.ஆனால் என்னிடம் ஒரு ரூபா இருக்கிறது" என்றார்.

உடனே காப்பாற்றியவர் இவரைப் பார்த்து "அப்படி என்றால் நீங்கள் இன்னொரு முறை தண்ணீரில் விழுந்து விடுங்கள் நான் காப்பாற்றிவிடுகிறேன். ஒரு ரூபா தாருங்கள்" என்றார்.இப்படிப்பட்டவர்கள் எத்தனை முறை தண்ணீரில் விழுந்தாலும் மனம் சுத்தமாகப் போவதில்லை.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி ஆட்சி இதுவே சுதந்திரக் கட்சியின் கொள்கை



### அமைச்சர் அனுரா

(கொழும்பு)

ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி ஆட்சி முறை என்பதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிப் படுத்தும் சுதந்திரக் கட்சியின் கொள்கையாயினும் சொற்கள் எனக்குப் பெரிய பிரச்சினை அல்ல. போதுமான அளவு அதிகாரப் பரவலாக்கல் நடைபெற்றால் சரி.

இவ்வாறு மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டுக்கு செல்லாமல் தனது வதிவிடத்தில் இருந்தே அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க கருத்துவெளியிட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் பொருளாதாரக்கொள்கைகள் தெளிவற்றனவாக உள்ளன. உள்ளே என்ன இருக்கின்றது என்பது தெரியவில்லை. இறக்குமதிகளுக்குக் கட்டுப்பாடு வருமா? இல்லை மூடிய பொருளாதார அமைப்புக்கு மாறுமா? இது பற்றி குறிப்பாக எதுவும் கூறப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் கம்பஹா மாவட்ட பிரசார வேலைகளில் கலந்து கொள்ளப்போவதாகவும் ஜேவிபியினருடன் ஒரேமேடையில் அமரப்போவதாகவும் அமைச்சர் அனுரா குறிப்பிட்டார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் நெருக்கமான ஒரு தேர்தல் அபிப்பிராய வாக்கெடுப்புகள் நம்பமுடியாதவை. எவருக்கு வெற்றி வாய்ப்பு உள்ளது என்பதை இப்போது கூறமுடியாது.

அமெரிக்கப் பாணியில் வேட்பாளர்கள் பகிரங்க விவாதங்களில் ஈடுபடல் வேண்டும். வாக்காளர்களுக்கு அதுவே தெளிவைத்தரும். குண்டு துளைக்காத கூடுகளுக்குள் மறைந்து நின்று கொண்டு வேட்பாளர்கள் உரையாற்றுவது வேதனையானது என்றும் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க மேலும் தெரிவிததுள்ளார். (ந-6)

# யுத்த நிறுத்த உடன்படிக்கையால் நாட்டிற்கு பல்வேறு நன்மைகள்

### ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்த நிறுத்த உடன்படிக்கையினால் நாட்டிற்கு பல்வேறு நன்மைகள் கிடைத்துள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமீரதுங்க தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்து கடைப் பிடிக்கப்பட்டுவருவதை ஜனாதிபதி பாராட்டியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவரது தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான முழுமையான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

யுத்தத்தால் நாட்டின் பல பாகங்களிலும் குண்டுகள் வெடித்ததன் காரணமாக இலங்கையில் முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த முதலீட்டாளர்கள் அதனை கைவிட்டுச் செல்ல நேர்ந்துள்ளது.

எனினும் கடந்த மூன்றரை ஆண்டு காலமாக யார் எதைக் கூறிய போதிலும் சில குறைபாடுகள் இருந்த போதும் யுத்த நிறுத்த உடன்படிக்கை காரணமாக மக்கள் அச்சமின்றி வாழ்ந்து வருகின்றனர் என்று குறிப்பிட்டுள்ளார். (ந-9)

# வாக்காளர் அட்டை விநியோகத்திற்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி

### தபால் மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கு மேற்கொள்ள தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் சேர்வின் சேனாதீர தெரிவித்துள்ளார்.


வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதில் யாதேனும் சிக்கல்கள் காணப்படுகின்றதா என்பது குறித்து தொடர்ந்தும் ஆராயப்பட்டுவருகின்றது.

இது தொடர்பாகக் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் யோசனைகளை முன்வைப்பதற்கு மாகாண பிரதி தபால் மா அதிபர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 28ஆம் திகதி பிரதித்தபால் மா அதிபர்களுடன் இது விடயம் தொடர்பில் விரிவான பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது பெறப்படும் இனங்களின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் திட்டமிடப்படும். வாக்காளர் அட்டைகளை எதிர்வரும் 25ஆம் திகதி தபால் திணைக்களம் பொறுப்பேற்றுக் கொள்ளவுள்ளது.

இதன் பின்னர் எதிர்வரும் 26ஆம் திகதி நாடெங்கிலும் உள்ள 3ஆயிரத்து 100தபால் நிலையங்களுக்கு அவற்றை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் 27ஆம் திகதி முதல் அவை வீடுகளுக்கு விநியோகிக்கப்படும் எனவும் தபால் மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-9)









அண்மையில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவின் சங்கீத கதாபிரசங்க இறுவெட்டு வெளியீட்டுவிழா நல்லை ஆதீனத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஸ்ண ஐயர் தலைமை உரை நிகழ்த்துவதையும், சிவஸ்ரீ தானு மகாதேவக்குருக்கள் முதல் பிரதியை வழங்குவதையும் விழாநாயகன் கானகதா வாரிதி பதில் உரைவழங்குவதையும் படங்களில் காணலாம்.

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு


(68)

உலகில் ஆடவர், மனைவி தன் வழிக்கு வரவில்லையானால் மனைவி வழியில் சென்றுவிட வேண்டும். அதனால் குடும்பப் பிரச்சினை தீர்ந்துவிடும்.

### வள்ளிமலை சரவணப் பொய்கை

வள்ளிமலையில் முருகப்பெருமான் தெப்பம் ஆடுகின்ற சரவணப் பொய்கை பழுதாக இருந்தது. வேலூர் தருமகுண சீலர் திரு A.S.அருணாசலம்பிள்ளை சரவணப் பொய்கைத் திருப் பணியை ஆரம்பித்துச்செய்து வந்தார். அத் திருப்பணிக்கு நான் தலைவன். குளத்திருப்பணி ஒரு பகுதி நடைபெறும் பொழுது என் ஆப்த நண்பரும், அறப்பணிச் செம்மலுமாகிய A.S.அருணாசலம் பிள்ளை வடநாட்டு யாத்திரை சென்றிருந்தபொழுது இடையில் முருகன் திருவடி சார்ந்துவிட்டார். அது எனக்கு இடி விழுந்தது போன்ற அதிர்ச்சியை உண்டாக்கியது. அவருடைய தவப்புதல் வர் A.பரமசிவம் தந்தையாரைப் போலவே நற்பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

இத்திருப்பணியில் என்னுடைய தமையனார் மறைஞானசிவம் அவர்கள் வள்ளிமலையிலி ருந்தே கவனம் செலுத்திவந்தார். அவரும் முருகனடி சேர்ந்துவிட்டார். இந்தக் குளத் திருப் பணியைச் செய்யும் மேஸ்திரி பண்பில்லாதவராக இருந்தார். அதனால் திருப்பணி வளர்ந்து கொண்டே சென்றது.

என் ஆப்த நண்பரும் காந்தீயத்தைக் கடைப்பிடிப்பவரும் உத்தம குணசீலரும் ஆகிய திரு மு.பெருமாள் என்பவர் இத்திருப்பணியின் செயலாளர்.

இவர் திருப்பணியைப்பற்றி மிக முயற்சி செய்தார். பெங்களூர் நற்குணசீலர் M.முனிசாமி ரெட்டியார் திருப்பணிக்குப் பெரும்பொருள் தந்து முன்பிருந்த திருப்பணியை உயிர் கொடுத்து நடைபெறச்செய்தார்.

முத்துக் கவுண்டன் புதூர் பெருங்கொடை வள்ளல் திரு M.நஞ்சப்ப செட்டியார் 15000 ரூபாய் வழங்கினார். பெங்களூர் சிறந்த அன்பர் C.அருணாசலம் முதலியார் இத்திருப்பணிக்குப் பெரிதும் உதவிசெய்தார். திருப்பணி கிடுகிடுவென்று துரிதமாக நடைபெற்று முடிவுபெற்றது.

12-4-78இல் சரவணப் பொய்கை திறப்புவிழாவும், கும்பாபிஷேக விழாவும் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. குடியாத்தம் மேதகு ஸ்ரீ ஹரிநாயுடு அவர்கள் அன்னதானம் செய்தார்.

### இலங்கைச் செலவு

நான் கொழும்புக்கும், யாழ்ப்பாணத்திற்கும் பலமுறை சென்று விரிவுரைத்தொண்டு செய்திருக்கின்றேன். கொழும்பு செல்லும் பொழுதெல்லாம் கதிர்காமம் சென்று மாணிக்க கங்கையில் மூழ்கி, கதிர்காமக் கந்தக் கடவுளை வழிபடுவேன்.

யாழ்ப்பாணத்தினருகில் கொக்குவில் மஞ்சவனப்பதியில் இருமுறை விழாக்காலத்தில் விரிவுரை செய்திருக்கின்றேன். அவர்கள் பலமுறை அழைத்தும் அங்கு மறுபடியும் போக முடியாமல் இருந்தது. 1 1/2 ஆண்டுகளுக்கு முன்னமேயே தேதியைக் குறிப்பிட்டு வரவேண்டுமென்று வற்புறுத்தி அழைத்தார்கள்.

1978 செப்டம்பர் 8ஆம் திகதி போவதாக முடிவு செய்து விமான டிக்கட்டு எடுத்துப் பிரயாணத்திற்கு ஒழுங்குசெய்தேன். இலங்கையில் அரசியல்வாதிகள் விமானத்தை எரித்துவிட்டார்கள். அதனால் 8ஆம் திகதி புறப்பட முடியவில்லை. இன்னும் ஒரு மாதத்திற்கு விமானம் திருச்சியிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் போகாது என்று கூறிவிட்டார்கள். மஞ்சவனப்பதியில் 8ஆம் திகதி விரிவுரையென்று பெரிய அளவில் விளம்பரம் செய்திருந்தார்கள். என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தேன். சென்னை பாரத் டிராவல் சர்வீஸிற்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டு சென்னையிலிருந்து கொழும்புக்குப் போக டிக்கட்டிற்கு ஒழுங்கு செய்தேன்.

### தேவரின் மறைவு

உத்தமமான சித்தமுள்ளவர் M.M.சின்னப்ப தேவர் என்னிடம் அளவற்ற அன்பு வைத்திருந்தவர். முரட்டு பக்தர் முருகனைத் தவிர வேறு மூர்த்திகளை வணங்காதவர்.

கோவை ராமநாதபுரத்தில் தேவருடைய பங்களா இருக்கிறது. அதுதான் அவருடைய பிறப்பிடம். ராமநாதபுரத்தில் ஒரு முருகன் கோயில் திருப்பணி பல ஆண்டுகளாக ஆமை வேகத்தில் நடந்துகொண்டிருந்தது. அங்குள்ள அன்பர்கள் மில்லில் வேலை பார்க்கும் ஏழைத் தொழிலாளிகள். அதனால் திருப்பணி வேகமாக நடைபெறவில்லை.

சரவணபுரம் தவத்திரு சுந்தர சுவாமிகள் இத் திருப்பணியில் அதிக அக்கறை உடையவர் கொங்கு நாட்டில் சைவத்தையும், தமிழையும் வளர்க்கின்ற தபோதனர் நம் சுவாமிகள். இவர்கள் எண்ணற்ற திருப்பணிகளையும், கும்பாபிஷேகங்களையும் செய்திருக்கின்றார். எல்லோருடனும் அன்பாகப் பழகும் அருளுருவாகிய சுவாமிகள் தேவரைச் சந்தித்து "தங்கள் ஊரில் முருகன் கோயில் திருப்பணி நடைபெறுகிறது. அங்குள்ள அனைவரும் ஏழைகள். தாங்கள் 5000 ரூபாய் நன்கொடையாகத் தந்தால் நல்லது" என்று தயங்கித் தயங்கிக் கேட்டார். தேவர் சிரித்துக்கொண்டு "அந்தத் திருப்பணிக்கு மொத்தம் எவ்வளவு ரூபாய் ஆகும்? என்று சொல்லுங்கள்!" என்று கேட்டார். சுவாமிகள் ஒரு கடிதத்தில் மண்டபத்திற்கு 5000, கொடி மரத்திற்கு 2000, கோபுரத்திற்கு 6000, கோயிலுக்குள் இருக்கும் ராமர் கோயிலுக்கு 7000 என்று குறிப்பிட்டு எழுதினார். ராமர் கோயில் என்றவுடன் தேவர் மேசை மேல் தலைவைத்துச் சாய்ந்து கொண்டார். இரண்டு நிமிடம் எழுந்திருக்கவில்லை. தேவருக்கு மயக்கமோ, அல்லது உறக்கமோ என்று தெரியாமல் சுவாமிகள் திகைத்துவிட்டார்.

தேவர் தலை நிமிர்ந்து "சுவாமி! நீங்கள் என் குருநாதர். எனக்கு முருகன் கோயிலைத் தவிர வேறு கோயில்களுக்குத் தருவதில்லை என்று விரதம். நீங்களோ என் குருநாதர். இப்பொழுது எனக்கு ஒரு பெரிய தர்ம சங்கடம் ஏற்பட்டுவிட்டது. விரதத்தைக் கடைப்பிடித்தால் குரு வார்த்தையைத் தட்டிய பாவம் ஏற்படும். குரு வார்த்தையைக் கடைப்பிடித்தால் விரத பங்கம்வரும். இந்த இக்கட்டான நிலையில் நான் தவிக்கிறேன்" என்றார்.

சுந்தர சுவாமிகள் "ராமர் கோயிலுக்குப் பணம்தந்து தங்களுக்கு விரத பங்கம் ஏற்பட வேண்டாம். நான் வேறு எங்காவது அதற்குரிய தொகையை வசூல்செய்து கொள்வேன். ஆதலால் அந்த 7000ம் போக மீதியைத் தாங்கள் கொடுத்தால் போதும்" என்றார்.

தேவர் "சுவாமி! விரதபங்கம் ஆனாலும் குற்றமில்லை. குருவார்த்தைக்கு மறு வார்த்தை பேசக்கூடாது. எல்லாத் தொகையும் நானே கொடுத்துவிடுகிறேன். திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்யுங்கள்" என்று கூறி 27000 ரூபாவும் கொடுத்துவிட்டார். திருப்பணி கிடுகிடுவென்று நடந்து முடிவுபெற்றது. செப்டெம்பர் 6-ஆம் திகதி கும்பாபிஷேகம். கும்பாபிஷேகப் பத்திரிகையில் தேவரும், நானும். வருவதாக விளம்பரம் செய்தார்கள். செப்டம்பர் 6-ஆம் திகதி கோவையில் எனக்கு 7 நிகழ்ச்சிகள் இருந்தன. காலை 10மணிக்கு நான் முன்னின்று கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தேன். தேவர் வருகிறார். வருகிறார் என்று சொன்னார்கள். ஆனால் வரவில்லை. காலை 11 மணி முதல் 12மணி வரை நான் விரிவுரை செய்தேன்.

தேவர் அன்று கோவை வழியாகத் தான் படப்பிடிப்பிற்கு ஊட்டிக்குச் சென்றார். 27000 ரூபாய் கொடுத்தும் கும்பாபிஷேகத்தை வந்து சேவிக்கும் வாய்ப்பு அவருக்கு அமையவில்லை. ஊட்டியில் படிப்பிடிப்பு வேலை நடைபெறும்பொழுது அவருக்கு இதய நோய் வந்தது. அன்று இரவு கோவை வந்து சேர்ந்தார் பத்து டாக்டர்கள் சிகிச்சை செய்தார்கள். (தொடரும்)

# அனுமதியின்றி கட்டடங்கள் கட்டப்பட்டால்
## சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிதாகக் கட்டடங்களை அமைக்கும் போது சபையின் அங்கீகாரமும் பிரதேச சபையின் தொழில் நுட்ப உத்தியோகத்தரின் ஆலோசனையும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென கொக்குவில் உப அலுவலகப் பொறுப்பதிகாரி எஸ்.பாலச்சந்திரன் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் முறையான அங்கீகாரமின்றிப் புதிதாகப் பல கட்டடங்கள் கட்டப்பட்டு வருவதாகத் தெரிவித்த பொறுப்பதிகாரி சபையின் அங்கீகாரமோ தொழில் நுட்ப உத்தியோகத்தரின் ஆலோசனையோ இன்றிக் கட்டப்படும் கட்டடச் சொந்தக்காரர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (து-36)

# தேர்தல் முடிவடையும்வரை புதிய ஆட்சேர்ப்புக்கள் இல்லை
## நிதியமைச்சின் செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

அரச சேவைகளில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் ஆட்சேர்ப்புகள் தவிர ஜனாதிபதித் தேர்தல் முடியும்வரை வேறு ஆட்சேர்ப்புக்கள் எதனையும மேற்கொள்வதில்லை யென்று நிதித்திட்டமிடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது சேவையில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதில்லை என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதிதாக யாரையும் சேர்த்துக் கொள்ள வேண்டாமென்றும் பதவி உயர்வுகளை வழங்க வேண்டாமென்றும் அனைத்து அமைச்சுகளின் செயலாளர்களுக்கும், மாகாண சபை செயலாளர்களுக்கும், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கும் நிதியமைச்சின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

தேர்தலுக்கென வேட்புமனுத் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் தொடங்கப்பட்ட வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புகள், அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுக்களின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புகள் இந்த தீர்மானத்திற்குள் உள்ளடங்காது என்றும் நிதியமைச்சின் செயலாளர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# காணாமல் போன சிங்களவரை தேடும் பணியில் தமிழீழ காவல்துறை

(திருகோணமலை)


தமிழீழ நிர்வாகப் பகுதியான திருகோணமலை சேருவில பிரதேசத்தில் காணாமல் போன சிங்களவரான உழவு இயந்திரச் சாரதியை தமிழீழ காவல்துறையினர் தேடி வருகின்றனர்.

இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவினர் சிங்கள பிரஸ்தாப சாரதியின் புகைப்படத்துடன் அவர் குறித்த விவரங்களை தமிழீழ காவல்துறையிடம் கையளித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டனர். இதையடுத்தே இந்தத் தேடுதல் நடவடிக்கையை தமிழீழ காவல்துறையினர் மேற்கொண்டு வருவதாகச் தெரியவருகிறது.

கடந்த 5ஆம் திகதி முதல் ரஞ்சித் ஜயசிறி (வயது 40) என்பவர் சேருவில பிரதேசத்தில் காணமால் போயுள்ளார் ஆழிப்பேரலை மீளமைப்புப் பொருட்களை உழவு இயந்திரத்தில் ஏற்றிச்சென்ற போது அவரது உதவியாளருடன் இவர் காணாமல் போனதாக கூறப்படுகிறது.

பிரஸ்தாப நபர் காணாமல் போனது தொடர்பாக கடந்த சனிக்கிழமை சிங்களவர்கள் திருகோணமலையில் முழு அடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலட்ஸ்டொட்டிர் கூறுகையில், காணாமல்போன சிங்களவரின் குடும்பத்தினருடன் தொடர்பில் இருந்து வருகிறோம். தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் சமாதான செயலகத்திடம் இது தொடர்பிலான தகவல்கள் கையளிக்கப்பட்டுள்ளன என்றார். (ற)



இளங்கலைஞர் மன்ற வாணி விழா இரண்டாம் நாள் நிகழ்வில் மன்றத் தலைவர் தலைமை உரைநிகழ்த்துவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கி வடபிராந்திய முகாமையாளர் திரு.து.ரகு மற்றும் மன்றச் செயலாளர் கவிஞர் சோப ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

அன்புள்ள ஆசிரியர்களே,

நான் உங்கள் பாடசாலைக்கு விஜயம் செய்து மாணவர்கள் பாடசாலை கல்வியின் பின் தங்கள் சொந்தக்கால்களில் நின்று உலகை நம்பிக்கையுடன் சந்திப்பதற்கு வேண்டிய அறிவுரைகளை வழங்கியுள்ளேன்.

சின்னம் கோப்பை

விக்டர் ஹெட்டிகொட
சித்தாலேப வைத்தியர்.

www.victor hettigoda.com
www.lankaenews.com
www.presidentialpoll2005.com

S.V.H.

# சச்சின் 22

## மீள் பார்வை

என். சொக்கன்

# ஒரு புயலின் கதை

ஆனால், கிரிக்கெற் ஒரு விநோதமான ஆட்டம். ஒருநாள் ராஜாவாக்கி சிம்மாசனத்தில் உட்கார வைக்கிறவனை, மறுதினம் குப்புறக் கவிழ்த்து தரையோடு நசுக்கித் தேய்த்து விடுவது அதன் விநோதமான பழக்கம். பெஷாவர் போட்டியில் ஜொலித்து கிரிக்கெற் உலகின் கவனத்தைப் பெற்ற இரண்டு நாட்களுக்குள் இந்தக் கசப்பான உண்மையைப் புரிந்து கொண்டான் சச்சின்!



பெஷாவரில் நடைபெற்றது அங்கீகரிக்கப்படாத கண்காட்சிப் போட்டி என்பதால், 1989 டிசம்பர் 18ஆம் திகதி குஜ்ரன்வாலாவில் நடந்த போட் டிதான் அதிகார பூர்வமாக சச்சினின் முதல் ஒருநாள் போட்டி!

இரண்டு நாட்க்ள் முன்புதான் பாகிஸ்தான் பந்து வீச்சாளர் களை நுரை தள்ளச் செய்திருந்த சச்சின், இந் தப் போட்டியில் தனது இரண்டாவ்து பந்திலேயே அவுட் ஆகிவிட் டான். முதல் சர்வதேச ஒருநாள் போட்டி-பூஜ்ஜி யம் ரன்கள்!

அதைவிடப் பெரிய அதிர்ச்சி, அடுத்த ஒருநாள் போட் டிக்கு, சச்சின் அணியிலேயே சேர்க்கப்படவில்லை. அவனுக்கு பதிலாக அனுபவ மிக்க சஞ்சய் மஞ்ச்ரேகர் விளையாட, அந்த சுற்றுப் பயணத் திலேயே முதன்முறையாக சச்சின் பெவிலியனிலேயே சும்மா உட்கார வேண்டியதாயிற்று. இதைக் கொஞ்சமும் எதிர்பார்த் திராத சச்சின், வாய்விட்டு அழாத குறைதான்!

நான்கு ஒருநாள் போட்டிகளில் ஒன்று ரத்தானது. இன்னொன்று கைவிடப்பட்டது. மற்ற இரண்டிலும் பாகிஸ்தான் அணி வெற்றிபெற, தோல்வி முகத்துடன் தாயகம் திரும் பியது இந்திய அணி. கேப்டன் பதவியில் இருந்து ஸ்ரீகாந்த் நீக்கப்பட்டார். 1990 ஜன வரியில் நியூஸிலாந்து செல்வதாக இருந்த இந்திய அணியின் தலைவராக அஸாருதீன் நிய மிக்கப்பட்டார்!

தனது இரண்டாவது சர்வதேச கிரிக்கெற் சுற்றுப் பயணத்துக்காக சச்சின், நியூஸி லாந்து வந் து இறங் கியபோதே, நியூஸிலாந்து வீரர்களும் ரசிகர்களும் அவனைப் பற்றி கேள்விப்பட் டிருந்தார்கள். வருங்கால நம்பிக்கை நட் சத்திரம் என்று பல நிபுணர்களால் புகழப்பட்ட சச் சி னின் ஆட்டத்தைப் பார்ப்பதற்கு அவர்களும் ஆவலோடுதான் இருந் தார்கள்.



ஆனால் அவர் களை வேண்டுமென்றே ஏமாற்றுவதுபோல் பயிற்சி ஆட்டங்களில் சச் சின் சரியாக விளை யாடவில்லை. கிறைஸ்ட்சர்ச்சில் நடை பெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் கூட, ரன் ஏதும் எடுக்காமல் முதல் பந்தி லேயே ஆட் டம் இழந்து விட் டான் அவன். இரண்டாவது இன் னிங்ஸில் இந்தியா தோல் வியைத் தவிர் க்க போராடிக்கொண்டிருந்த போது இரு பத்துநான்கு ரன் கள் எடுத்தான். ஆனால் அது அவனது அணியைக் காப்பாற்றப் போதவில்லை. இந் தியா முதல் டெஸ்டில் படுதோல்வி அடைந்தது.

சில நாட்களுக்குப் பின், நேப்பியரில் இரண்டாவது டெஸ்ட் போட்டி துவங்கியது. முதல் போட்டியில் வென்ற நம்பிக் கையோடு இருந்த நியூஸிலாந்து வீரர்கள் சச்சின் குறித்த எதிர்பார்ப்புகளையும் குறைத்துக்கொண் டிருந்தார்கள் . 'சில சமயங்களில் பத்திரிகைகள் சுமாரான ஆட்டக்காரர் களைக் கூட ரொம்பவும் மிகைப்படுத்தி எழுதி விடு கின்றன. அப்படி தவறாகப் புகழப்பட்டு விட்ட சாதாரண பையன் தான் சச்சின் என்று நாங் களெல்லாம் முடிவு கட்டியிருந்தோம் என் கிறார் அப்போதைய நியூஸிலாந்து அணி யின் கேப்டன் ஜான்ரைட்.

அந் த எண் ணங் கள் யாவற் றையும் துடைத்து எறிவது போல் நேப்பியரில் விளை யாடினான் சச்சின். மளமளவென்று துவக்க விக்கெற்கள் சரிந்த நிலை யில் சச்சினும் விக்கெற் கீப்பர் கிரன் மோரேயும் இணைந் து நிதானமாக ரன் சேர்த்தார்கள். ஆரம்பத்தில் நிறைய தவறு கள் செய்த சச்சின், பின்னர் தனது ஆட் டத்தை நிலைப்படுத்திக் கொண்டு பொறுமையாக விளையாடினான். அன் றைய ஆட்ட நேர இறுதியில் சச்சின் 80 ரன்களுடன் ஆட்டமிழக் காமல் இருந்தான்.

மறுநாள் காலை சச்சின் மீண்டும் விளையாடத்து வங் கும் முன் அவனைச் சுற் றி புதியதொரு பரபரப்பு உருவாகியிருந்தது. அது வரை டெஸ்ட் போட்டிகளில், உலகிலேயே மிக இளம் வயதில் சதம் அடித்த சாதனை பாகிஸ்தான் வீரர் முஷ்டாக் மொஹம்மதிடம் இருந் தது. அவரை விட இளையவனாகிய சச்சின், இப்போது எண்பது ரன்களில் விளையாடிக் கொண் டிருக்கிறான். இன்னும் இருபதே ரன்களைச் சேர்த்துவிட்டால், அந்த சாதனையை முறியடித்துவிடலாம்!

உலக சாதனையை குறிவைத்து சச்சின் விளையாடவில்லை என்றாலும், எல்லோரும் அதுபற்றி அவனிடம் பேசி இருந்தது அவனுக்குள் ஒரு எதிர்பார்ப்பை உண்டாக்கியி ருந்தது. அன்றைய தினம் அவன் சந்தித்த முதல் பந்தையே பவுண்டரிக்கு அனுப்பினான் சச்சின்- 84 ரன்கள், பின்னர் ஒரு பந்தில் நான்கு ரன்கள் ஓடியே சேர்க்க முடிந்தது. கண் மூடித் திறப் பதற்குள் எண்பதிலிருந்து எண்பத்து எட்டு, இன்னும் பன்னிரண்டே ரன் தொலைவில் உலக சாதனை!

இந்த நிலைமையில் தான் சச்சினின் இயல்பான துறுதுறுப்பே அவனுக்கு வில்லனாக வந்தது. டேனி மோரிஸன் வீசிய அடுத்த பந்தையும் பவுண்டரிக்கு விரட்ட முயன்ற சச்சின், அதைச் சரியாகக் கணிக்காததால் அது எதிர்பாராத விதமாக மிட்டஆஃப் திசையில் பறந்தது. அங்கி ருந்த கேப்டன் ஜான் ரைட்டுக்கு மிகச் சுலபமான கேட்ச் அதீத தன்னம்பிக்கையால் செய்த ஒரு தவறு .சச்சினின் பல மணிநேர உழைப்பை வீணாக்கி விட்டது!

(தொடரும்)

# ஏமாந்த காலம் போய்விட்டதாக மின்சக்தி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் தான் மக்களுக்கு அளிக்கப்பட்ட பெருமளவு வாக்குறு திகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சி மக்களை ஏமாற்றும் பொருட்டு பல வாக்குறுதிகளுடன் தேர்தல் விஞ் ஞாபனம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

மூன்று வருடகால ஆட்சியில் ஐக் கிய தேசியக் கட்சி மக்களை ஏமாற் றியது போல் இனியும் மக்களை ஏமாற்ற முடியாது, ஏமாறமாட்டார்கள் என மின்சக்தி,எரிபொருள் துறை அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார்.


நாரமலை நகர மண்டபத்தில் நடை பெற்ற தம்பதெனிய தொகுதியின் சுதந்திரக்கட்சி ஆதரவாளர் கலந்து கொண்ட கூட்டத்தில் பேசும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்று கையில்கடந்த தேர்தல் காலத்தில நாம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் பெருமளவு நிறைவேற்றப்பட்டுள்ளன.

பெருமளவு வேலையற்ற பட்ட தாரிகள் இன்று அரச சேவையில் சேர்ந்துள்ளனர். நாட்டில் விவசாயி களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒரு திறமையான வேட்பாளரை எமது கட்சி தேர்தலில் நிறுத்தி யுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வின் வெற்றிக்கு மக்கள் தமது ஆத ரவை பூரணமாக தெரிவித்து வரு கின்றனர் என்றும் குறிப்பிட்டார்(து-7)



கரவெட்டி சாமியன்அரசடி தச்சை ஐங்கரன் இந்து அற நெறிப் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட முருகையா சின் னையா ஞாபகார்த்த மண்டப திறப்புவிழாவில் வடமராட்சி வல யக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா மங்கள விளக்கேற்று வதையும், அருகில் அறநெறிப் பாடசாலை காப்பாளர் வி.சி.பொன் னம்பலம் நிற்பதையும் படத்தில் காண்க.

(படம்: மருதங்கேணி செய்தியாளர்)

# விருது வழங்கிக் கௌரவம்

(பருத்தித்துறை)

உலக ஆசிரியர் தினத்தை யொட்டி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை யில் கல்விப் பணியாற்றும் 25 வருட சேவையைப் பூர்த்தி செய்த 5 ஆசிரியைகளும், அதிபரும் பாட சாலை அபிவிருத்தி சங்கத்தால் விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.


ஆசிரியைகளான திருமதி லீலா கணேசலிங்கம், ராகினி ஆனந்த ராஜா, ராகினி ஸ்ரீஸ்கந்தராஜா, யோதிமலர் தியாகலிங்கம் ஆகியோ ரும் அதிபர் திருமதி செல்வமலர் சுந்த ரேசனுமே விருது வழங்கிக் கௌர விக்கப்பட்டவர்களாவர்.

(து-52)



வட மாகாணத்திற்கான விஜ யத்தை மேற்கொண்டு அண்மை யில் தென்னிலங்கை லயன்ஸ் கழகக் குழுவினர் யாழ்ப்பாணத் திற்கு வருகை தந்தனர். இதன் போது சாவகச்சேரி லயன்ஸ் கழ கத்தின் காரியாலய பெயர்ப்பல கையை லயன்ஸ் ஆளுநர் லயன் சரத் குணசேகரா (ஜே.பி) திரை நீக்கம் செய்து வைப்பதை முதலா வது படத்திலும், அதன் பின் பாட சாலை மாணவர்களுக்கு படிப்புக் கான உதவு தொகையை அவர் வழங்குவதையும், அருகில் சாவ கச்சேரி லயன்ஸ் கழகத் தலை வர் லயன் சிவபாலசுப்பிரமணியம் நிற் பதையும் மறுபடத்திலும் காண லாம்.

(படங்கள்:- சாவகச்சேரி நிருபர்)



# ஊழியர்களின் வேலை நிறுத்தத்தினால் வைத்தியசாலைப் பணிகள் ஸ்தம்பிதம்

## 25 முதல் முழுமையான போராட்டத்தை நடாத்த முஸ்தீபு

(கொழும்பு)

சுகாதார ஊழியர்கள் நேற்று முன்தினம் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர். இதனால் நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளில் சத்திரசிகிச்சைகள் உட்பட வைத்திய சேவைகள் அனைத்தும் பாதிக்கப்பட்டன.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மட்டும் 60 சத்திரசிகிச்சைகள் நேற்று முன்தினம் இடை நிறுத்தப்பட்டதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்ட பிரேரணை மூலம் உறுதியளிக்கப்பட்ட 2500 ரூபா கொடுப்பனவுகளில் 50 வீதமான தொகையை தமக்கு வழங்கவில்லை என்று சுகாதார ஊழியர் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

அமைச்சின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே இந்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதாக சுகாதார ஊழியர் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் முழுமையான பணிப் புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ர-9)

# புலிகளை ஆதரிப்பதற்கான தடையை எதிர்த்து அமெ.இல் வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்கும் செயற்பாடுகளை அமெரிக்காவில் செயற்படுத்தக் கூடாது என்ற அமெரிக்காவின் தடையை எதிர்த்து அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள தமிழ் அமைப்புக்கள் மற்றும் மனித உரிமைகள் அமைப்புகள் என்பன இணைந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்டபூர்வ நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கவும், 2004ஆம் ஆண்டு கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரிவிற்குள் சேவையாற்றுவதற்கு அமெரிக்காவின் அவசரகால பொருளாதார தடைச்சட்டம் தடையாகவுள்ளது.

அமெரிக்காவின் மீது நடத்தப்பட்ட 2001 செப்ரெம்பர் தாக்குதலின் பின்னர் கடந்த ஆண்டு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் இந்த அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தினார்.

அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட பல்வேறு அமைப்புகளில் குர்திஷ் விடுதலை அமைப்பு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகிய அமைப்புகளுக்கு பொருள் உதவிகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் இச்சட்டம் தடைவிதித்தது.

இத்தடையினால் எந்தவொரு அமைப்பினதும் சட்டபூர்வ மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு உதவி செய்யும் அமெரிக்கக் குடி மக்கள் பாதிக்கப்பட்டு வருவதாக ஆட்சேபணைகள் எழுந்துள்ளன.

இந்நிலையிலேயே அமெரிக்காவில் உள்ள மனித உரிமைகள் அமைப்புகள் மற்றும் தமிழ் அமைப்புகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்கவும், புலிகளின் நிர்வாகப் பிரிவுக்குள் சேவையாற்றவும், தடையாக இருக்கும் இந்த 2001ஆம் ஆண்டுச் சட்டத்தை எதிர்த்தும் வழக்குத் தாக்கல் செய்ய முடிவெடுத்துள்ளன, சட்டபூர்வ உரிமைகள் மையத்தின்ால் இந்த வழக்கு தொடரப்படவுள்ளது. (ர)

# அல்லி ராணிக் கோட்டை அழிவுறும் நிலையில்!

(மன்னார்)

மன்னாரில் அரிப்பு பிரதேசத்திலுள்ள வரலாற்றுப் புகழ்மிக்க அல்லி ராணிக் கோட்டை தற்போது கவனிப்பாரின்றி கடல் அரிப்புக்கு உட்பட்டு தற்சமயம் இடிந்து விடும் நிலையிலுள்ளது.

இக் கோட்டையினை பாதுகாக்க சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இலங்கையில் உள்ள கோட்டைகள் யாவும் ஒல்லாந்தர், போர்த்துக்கேயர் போன்ற அந்நியரால் கட்டப்பட்டன. ஆனால் அல்லி ராணிக் கோட்டையானது தமிழ்ப் பெண்ணான அல்லி ராணியால் கட்டப்பட்டதாகும்.

இக் கோட்டையில் அல்லி ராணி பயன்படுத்திய சுரங்கப் பாதைகளுக்கான தடயங்களும், சான்றுகளும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இக் கோட்டையைப் பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ர)

# ஐ.நா அபிவிருத்தி மையத்தினால் 25 புதிய வீடுகள் நிர்மாணம்

(பொன்னாலை)

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அராலி மேற்கு கிராமத்தின் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி மையம் 25 வீடுகளை புதிதாக நிர்மாணித்துக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளது.

இதற்கான முழு முயற்சிகளையும் வலி.மேற்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் மேற்கொண்டுள்ளார்.

ஒவ்வொரு வீடுகளும் தலா 2இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இவ்வீட்டுத் திட்டத்திற்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணியில் வலி. மேற்குப் பிரதேச செயலகத் திட்டமிடல் பிரிவினர் அராலி மேற்கு கிராம அலுவலர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, மேற்படி கிராமத்தில் ஏற்கனவே ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி மையத்தின் நிதியுதவியுடன் பொதுமண்டபம் ஒன்றும் பிரதான வீதி ஒன்றும் நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-49)


# நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு

## வடக்கு கிழக்கு மாகாண சபை

## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம் -II

(நீகோட்-II)

நிதி -ஆசிய அபிவிருத்தி வங்கி

ஆஅவ கடன் இல: 2168-சிறீ (எஸ்எவ்)

## கேள்வி அறிவித்தல் - இல: 58
## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித்திட்டம் (NEGCORD-II) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து ("ஆ.அ.வ.") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழே உள்ள அட்டவணை யில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்காக ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப் பனவுகளுக்கு இக்கடனை வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

02. இதன் பின்னால் தொழில் தருணராக குறிப்பிடப்படும் நேுஊழுனு திட்டக்கேள்விச்சபைத் தலை வரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக் காரரிடம் இருந்து பொறி வைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

### அட்டவணை

| தொ.இல | ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின்பெயர் | ஆக குறைந்த ICTAD பதிவு | கேள்வி பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | NEP/NECORD-II / ID/01 | திருகோணமலை உப்பு வெளி முகாமைத் துவ அபிவிருத்தி பயிற்சி நிலைய மூன்று மாடி நிர்மாணம். | M4 கட்டடங்கள் | 260,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்குடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.

I நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித் துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தால் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக (ICTAD டுடன் ஆகு க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

ஐஐஐ. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன் மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுபத்திரலங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும் இக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவேர் வேண்டப்படுகின்றனர்.

ஐஏ. கூகூஐஊவுயுனு஠ெ வழிகாட்டல் முறையகின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்

ஏ ஒப்பந்தக்காரர் மோசடியான அல்லது வஞ்சனையாக நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றினுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

ஏஐ கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காராரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.

04. ஏதாவது ஒப்பந்த்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் நேுஊழுசுனு வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை திட்டப்பணிப்பாளர், நீகோட் திட்டம், 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 026-22274334 ஃபக்ஸ்: 02622274401. இணையதள முகவரி: WWW.necord. org ஈமெயில் :necord@sltnet.lk)

06. கேள்வி ஆவணங்களை 21.102005 இலிருந்து 07.11.2005 வரை காலை 9.30இலிருந்து மாலை 3.00மணிவரை வேலைநாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 2,000.ஃஸ்ரீஜச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

07. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.

08. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்ட கேள்விச் சபை, கூகூஜீகோட்஠ெ ,55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு, 14.11.2005காலை 11.30 மணிக்கு முன்பதாக கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.

09 முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமென்று எமது அலுவலகத்தில் 7.11.2005 ஆம் திகதி அன்று காலை 11.30 மணிக்கு நடைபெறும்.

10. தேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் தாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருணர் பொறுப்பாகமாட்டார்.

**த.லங்காநேசன்,**
தலைவர். கேள்விச்சபை.
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம்.
55.கந்தசுவாமி கோவில் வீதி. திருகோணமலை.

(அ-C/1753)





வடமராட்சி லயன்ஸ் கழகத்திற்கு லயன்ஸ் வலயத் தலைவர் லயன் எஸ்.அரியரட்ணம் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட போது வடமராட்சி லயன்ஸ் கழகத் தலை வர் லயன் வி.சிவகுமாரன் அவரை வரவேற்பதையும் லயன் சீமாட்டி திருமதி எஸ்.ரஞ்சிதமலர் உட்பட லயன்ஸ் உறுப்பினர்கள் நிற்பதையும், வலயத் தலைவர்மங்கள விளக்கேற்று வதையும், சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு வலயத் தலைவர் நிதியுதவிக்கான காசோலையை அன்பளிப்புச் செய்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பரு.நிருபர்)

# ரன்களை குவித்து திறமையை நிரூபிப்பேன்

## - கங்குலி நம்பிக்கை



துலிப்கோப்பை கிரிக்கெட் போட்டி நேறறு குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் தொடங்கி 4 நாட்கள் நடக்கிறது, இதில் காயம் காரண மாக இலங்கையுடனான போட்டியில் பங்கேற்க முடியாமல் இருக்கும் கங்குலி கிழக்கு மண் டல அணி சார்பில் விளையாடுகிறர். இவர் திறமையாக விளையாடினால் இலங்கை அணியுடன் நடக்கும் கடைசி 5 ஒருநாள் போட்டிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்.

இதற்காக ராஜ் கோட் வந்துள்ள கங்குலி நிருபர்களிடம் கூறியதாவது:-

இப்போது என்னுடைய ஒரே குறிக் கோள் அதிகமாக ரண் குவிக்க வேண்டும் என்பது மட்டுமே. நான் சிறப்பாக விளையாடி என திறமையை நிருபிப்பேன்.

இந்திய அணி மற்றும் கப்டன் பதவி பற்றி நான் எதையும் சொல்ல விரும்பவில்லை. நான் தொடர்ந்து கிரிக்கெட் விளையாட வேண் டும். மேலும் வேறு எதையும் நான் நினைத் துப் பார்க்கவில்லை. இவ்வாறு கங்குலி கூறி னார்.

கங்குலியின் காயம் குணமாகி மீண்டும் விளையாடத் தகுதிபெற்று இருப்பது குறித்து அவ ருக்கு சிகிச்சை அளித்த கொல்கத்தா டாக்டர் கல்யாண்முகர்ஜி கூறியதாவது,

கங்குலிக்கு ஏற்பட்டு இருந்தது சாதாரண காயம்தான். ஆரம்பத்திலிலேயே இதைக் கண்டுபிடித்துவிட்டதால் எளிதாகக் குண மாக்க முடிந்தது. அமெரிக்காவில் இருந்து மருந்தை வரவழைத்து கொடுத்து குணப் படுத்தினேன்.

டெண்டுல்கருக்கு ஏற்பட்டது போல இது மோசமான காயம் அல்ல. டெண்டுல்கருக்கு 3ஆம் நிலை காயம். கங்குலிக்கு ஏற்பட்டு இருந்தது. முதல் நிலை காயம் எனவே இதை குணமாக்குவதற்கு சிரமம் எதுவும் இல்லை. அவர் இனி வழக்கம் போல விளையாட லாம். இவ்வாறு கல்யாண்முகரிஜி கூறினார். (ற)

## விளையாட்டு செய்திகள்



சூரிச் நகரில் நடந்த சூரிச் ஓபன ரெனிஸ் போட்டியில் ஸ்லோவாகியாவின டேனியலா ஹண்டு சோவா 1-6, 7-5, 6-4 என்ற புள்ளியில் ஜப்பானின் அய்சுகியா மாவை வீழ்த்தினார்.





பயிற்சியில் கலந்து கொள்ள வந்த அகார்கர்.

# இங்கிலாந்து அணியை சுழற்பந்து வியூகத்தால் வீழ்த்துவோம் - பாக். கப்டன் இன்சமாம்



பாகிஸ்தானிற்கு வருகை தரும் இங் கிலாந்து அணியை சுழற்பந்து வீச்சு மூலம் வீழ்த்த திட்டமிட்டிருப்பதாக பாகிஸ் தான் கிரிக்கெட் அணியின் கப்டன் இன் சமாம் உல் ஹக் தெரிவித்துள்ளார்.

மேலும், இப்போட்டி பாகிஸ்தானில் நடைபெறவிருப்பதால், இதற்கேற்றாற் போல் ஆடுகளங்களைத் தயார் செய்ய வும் முடிவு செய்திருப்பதாக இன்சமாம் குறிப்பிட்டார்.

இலண்டனிலிருந்து வெளிவரும் 'தி டெலிகிரஸ்' என்ற தின இதழுக்கு அளித் துள்ள பேட்டியிலேயே பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்சமாம் இவ்வாறு கூறியிருக்கிறார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி விரை வில் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற் கொண்ட அந்த அணிக்கு எதிராக போட்டி களில் விளையாடவிருக்கிறது.

பாகிஸ்தான் அணிக்கு ஒரே சாதகமான நிலைமை உள்நாட்டு ஆடுகளங்களாகும். கடந்த ஒரு வருடகாலமாக டேனிஷ்கனே ரியா முக்கிய சுழற்பந்துவீச்சாளராக இருந்து வருகிறார். அவருக்கு உதவும் வகையில் விக்கெட்டுக்களைத் தயார் பண்ணவிருக கிறோம் என்றும் கப்டன் இன்சமாம் தெரி வித்துள்ளார்.

கடந்த வருடம் பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளராக பாம் உல்மர் பொறுப்பேற்ற பிறகு, சுழற்பந்துவீச்சில் கனேரியாவிற்கு உதவியாக சாகித் அப்ரிடியை பாகிஸ்தான் பயன்படுத்தி வருகிறது. ஆனால் அடுத்த வாரம் பாகிஸ்தான் தேசிய அணிக்கும், ரெஸ்ட் ஆப் பாகிஸ்தான் அணிக்கும் இடை யேயான பயிற்சி ஆட்டத்திற்கு முஸ்டாக் அகமது தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்.

இதன்மூலம், ஆஷஸ் தொடரில் வெற்றி பெற்ற மைக்கேல் வாகன் தலைமையிலான இங்கிலாந்து அணிக்கு எதிரான உள்நாட் டுத் தொடரில், மூத்த லெக்ஸ்பின்னரான முஸ்டாக் அகமது பங்குகொள்ளும் வாய்ப்பு உள்ளது.

கடந்த கவுண்டி சீசனில் கலந்து கொண்ட முஸ்டாக் மொத்தம் 80 விக்கெட்டுக்களை சஸ்செக்ஸ் அணியின் சார்பாக கைப்பற்றி னார். 35 வயதைக் கடந்துள்ள முஸ்டாக் அகமது கடந்த இரண்டு வருட காலமாக சர்வதேச போட்டிகளில் பங்கேற்கவில்லை.

இங்கிலாந்திற்கு எதிரான உள்நாட்டுத் தொடரில் பாகிஸ்தான் அணியில் முஸ்டாக் அகமது இடம்பெறுவாரா என்பதற்கு அவர் உத்தரவாதம் அளிக்கவில்லை. முஸ்டாக்கிடம் ஏராளமான அனுபவம் உள்ளது. தற்போதுள்ள நெருக்கடியில் எந்த ஒரு வீரருக்கும் அணியில் நிச்சயம் இடம் உண்டு என்று நான் கூறமுடியாது என்றும் இன்சமாம் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலையில் 4 அல்லது 5 மாத காலம் ஒரு வீரர் சர்வதேசப் போட்டிகளில் ஆடவில்லை என்றால் அவரது இடம் அணி யில் உறுதியில்லை

மேலும், இங்கிலாந்து அணி தற்போது வலுவான நிலையில் உள்ளது. எனவே அந்த அணியை தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டும். அணியில் உள்ள 11 வீரர்களும், அர்ப் பணிப்பு உணர்வுடன் ஆடினால்தான் இங்கி லாந்து அணியை சமாளிக்க முடியும். தவிர, சோயப் அக்தர், மொகமது சமி மற்றும் ஷபீர் அகமது ஆகியோர் முழு உடற்தகுதியுடன் அணியில் இடம்பெற்றால், அணியின் தொடக்க தாக்குதல் நன்றாக இருக்கும் என்றும் இன்ச மாம் உல்ஹக் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(ற)

# ரெனிஸ் தரவரிசைப் பட்டியலில் 32வது இடத்தில் சானியா மிர்சா



சர்வதேச ரெனிஸ் தரவரிசைப் பட்டிய லில் சானியா மிர்ஷா 32ஆவது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளார்.

டபிள்யூ டி.ஏ.ரெனிஸ் தரவரிசை பட்டி யல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. இதில் இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திர மான சானியா மிர்சா 31இலிருந்து 32வது இடத்திற்கு பின்தள்ளியுள்ளார்.

சமீபத்தில் நடந்த தாய்லாந்து ஓபன் தொடரில் பங்கேற்ற இவர் முதுகுவலி காரண மாக இரண்டாவது சுற்றிலே வெளியேறினார். இதனால் தரவரிசைப் பட்டியலில் பின்ன டைவு ஏற்பட்டுள்ளது.

தற்போது 956.50 புள்ளிகளுடன் உள்ள இவர் அடுத்த இரண்டு மாதங்களும் எந்த வொரு போட்டியிலும் பங்கேற்கவில்லை என தெரியவந்துள்ளது. ஆசியாவின் முதல்தர வீராங்கனையான ஜப்பானின் அய் சுகியாமா 28ஆவது இடத்தில் உள்ளார்.

இரண்டாவது இடத்தில் உள்ள சானியா மிர்சா இன்னும் 5 இடங்கள் முன்னேறி விட் டால் போதும்... ஆசியாவின் முதல்தர வீராங் கனை என்ற சாதனையைப் படைத்து விட லாம். அடுத்த ஆண்டு மிக விரைவிலே இந்த சாதனையையும் சானியா நிகழ்த்து வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ற)





இந்திய கிரிக்கெட் அணி அடுத்ததாக இலங்கை அணியுடன் 7 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் மோதவுள்ளது.

இதில் பங்கேற்கவுள்ள இந்திய வீரர்களுக்கான பயிற்சி முகாம் நேற்று முன்தினம் பெங்களூரில் தொடங்கியது. இதில் நீண்ட இடைவெளிக்கு பிறகு பங்கேற்ற சச்சின் டெண்டுல்கர் இலங்கை சவாலுக்கு நான் தயார் என்பது போல குறும்பாக சைகை காட்டுகிறார்.



மாஸ்டர் பிளாஸ்டர் சச்சின் டெண்டுல்கர் பலத்த பாதுகாப்புடன் நேற்று முன்தினம் பெங்களூர் விமான நிலையம் சென்றடைந்த போது...

அறிவாளி ஒருமுறைதான் ஏமாற்றப்படுவான். முட்டாளோ பலமுறை ஏமாற்றப்படுவான்.

அப்துற் றஹீம்

வலம்புரி

## விடுதலைப்புலிகளின் பகுதியில் வேவு விமானத்திற்கு என்ன அலுவல்?

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கிளிநொச்சி -கனகராயன் குளத்தை அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான வேவு விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியுள்ளது.

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விமானங்கள் வீழ்ந்து நொருங்குவதும், விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு அவை இலக்கானதும் சர்வசாதாரண விடயம்.

எனவே இலங்கை விமானப்படைக்கு சொந்தமான வேவு விமானம் வீழ்ந்து நொருங்கியது குறித்து யாருமே ஆச்சரியப்படவில்லை.

ஆனால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வேவுவிமானம் நடமாடியது குறித்தே மக்கள் அதிர்ச்சி கொண்டுள்ளனர்.

அரசும், விடுதலைப்புலிகளும் செய்துகொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் இராணுவ வாகனங்களோ யுத்த மற்றும் வேவு விமானங்களோ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்வது தடைசெய்யப் பட்டுள்ளது.

இலங்கை விமானப்படையின் வேவுவிமானம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைவதென்பது அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிராந்தியத்திற்குள் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஆளில்லா விமானம் வேவுபார்ப்பதென்பது அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் என்பதற்கப்பால் அது நம்பிக்கைத் துரோகமும் ஆகும்.

அரசும், விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை காரணமாகவே யுத்தம் ஓய்வெடுத்துள்ளது.

இந்நிலையில் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு கெடுதி விளைவிக்கும் வகையில் விமானப்படையின் ஆளில்லா விமானம் விடுதலைப்புலிகளின் பகுதிகளையும்-அவர்களின் நடமாட்டங்களையும் வேவுபார்த்துள்ளது.

யுத்தநிறுத்தம் நடைமுறையில் இருக்கின்ற போதே அரசு இவ்விதம் நடந்துகொள்ளுமாயின் அந்த அரசை தமிழ் மக்கள் எங்ஙனம் நம்ப முடியும் என்ற கேள்வி மக்களிடம் எழுவது நியாயமானதே.

யுத்தநிறுத்த மீறல்கள் அவ்வப்போது ஏற்பட்டுள்ள போதிலும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இலங்கை விமானப்படையின் வேவுவிமானம் நோட்டம் இட்ட செயல் மன்னிக்க முடியாத செயலாகும்.

வேவு விமானம் வீழ்ந்து நொருங்கியதன் மூலமே விமானப்படையின் வேவுநடவடிக்கை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்று வந்துள்ளமை அம்பலமாகி உள்ளது.

அப்படியானால் யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்துகொண்டது முதல் இன்றுவரை எத்தனை தடைவைகள் வேவுபார்க்கும் கயமைத்தனம நடந்திருக்குமென்பது ஊகித்துக்கொள்ள முடியும்.

எனவே மிகமோசமான இவ் யுத்தநிறுத்த மீறல் குறித்து கண்காணிப்புக்குழு உரிய நடவடிக்கை எடுப்பது மிக அவசியமானதாகும்.

# நல்லாசிரியர்களினாலேயே நாடு செழிக்கும்
# ஆசிரியர் தின விழாவில் பரு.மாவட்ட நீதிபதி அறிவுரை

(பருத்தித்துறை)

'ஆசிரியத் தொழில் புனிதமான, தெய் வீகத் தன்மையான தொழிலாகும். ஆசிரியர் கள உளத் தூய்மையுடனும், பொறுப்புணர் வுடனும் செயற்பட்டு மாணவர்களுக்குச் சிறந்த கல்வியைப் புகட்டும் போதுதான் அவர் களது எதிர்காலம் சிறப்புற அமைவதுடன் நாடும் சுபீட்சம் பெறமுடியும்'.

மேற்கண்டவாறு, பருத்தித்துறை மெத டிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியர் தின விழாவிலே பிரதம விருந் தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரிய நாயகம் குறிப்பிட்டார்.

விழா பாடசாலை அபிவிருத்திச் சங்கச செயலாளர் எஸ்.திருச்செல்வம் தலைமை யல் நடைபெற்றது. பாடசாலை வாசலிலிருந்து பிரதம விருந்தினர், அதிபர், ஆசிரியர்கள் மலர் ாலைகள் அணிவிக்கப்பட்டு பாண்ட வாத் திய இசையுடன் விழா மண்டபம் வரை ஊர் வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

பாடசாலையின்பழைய மாணவிகள்சங்கச் செயலாளர் செல்வி தனம் வேலுப்பிள்ளை (இளைப்பாறிய பிரதி அதிபர்) மங்கள விளக கேறற, சிரேஷ்ட மாணவத் தலைவி செல்வி ஜே.அந்தோணிப்பிள்ளை வரவேற்புரை நிகழத்தினார். ஆசிரியர்கள் ஆசிரியகீதம் இசைத்தனர்.

தொடர்ந்து உரையாற்றிய மாவட்ட நீதிபத அரியநாயகம் குறிப்பிட்டதாவது,

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை இலங்கையிலேயே சிறந்த முன்னணிப் பாடசாலை என்பதையும் இப்பாடசாலையில் கல்வி கற்ற பல மாணவிகள் நாட்டின் பல்வேறு பாகங்களி லும் உயர் பதவிகளை வகித்துச் சாதனை கள் நிலைநாட்டி வருவதையும் கேள்விப் பட்டிருக்கின்றேன். இப்பாடசாலை சுனாமி யால் பாதிப்படைந்துள்ளதால் ஆசிரியர் கள், மாணவிகள் பலத்த இன்னல்களுக் குள்ளாகியுள்ளனர். கட்டடங்கள் மிகச் சேதமடைந்துள்ளன. இப்பாடசாலையின் அபி விருத்தியில் பல்வேறு துறைகளிலும் இன்று மிகக் கவனமெடுக்க வேண்டியது அவசியமாகவுள்ளது.

இன்று ஒரு சில ஆசிரியர்களின் பொறுப் பற்ற நடத்தைகளினால் முழு ஆசிரிய சமூகத்திற்குமே அவமான்ம் ஏற்பட்டு வரு வது மிகக் கவலைக்குரியதாகும். இதனை ஆசிரிய சமுதாயம் அனுமதிக்கக் கூடாது. நான் நீதிபதியாக பணியாற்றுவதனால் அத்தகைய ஆசிரியர்கள் பற்றி அதிகம் அறியக்கூடியதாக இருக்கின்றது. ஆசிரியர் கள் சமூகத்திற்கு முன் உதாரணமாகத் திகழ்ந்து தொழிலுக்குப் பெருமை தேடிக் கொள்ள வேண்டும்.

மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியர்களுமநவீன விஞ்ஞான தொழில்நுட்ப மாற்றங் களுக்கேற்ப படித்துக் கொண்டேயிருக்க வேண்டும். ஆசிரியர்கள் பாடங்களை முன் ஆயத்தம செய்தே வகுபபறைகளுக்குச் செல்ல வேண்டும். அப்போதுதான் கற்பித் தல் சிறப்புறும். மாணவர்கள் போதிய அறி வைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

மாணவர்களுக்கு ஒழுங்கு, கட்டுப்பாடு களைப் போதிக்கும் ஆசிரியர்கள் தாமும ஒழுங்கு, கட்டுப்பாடுகளுடன் செயற்பட்டு மாணவர்களை நல்வழிப்படுத்த வேண் டும. ஆசிரியர்கள் ஒழுங்கீனமாகச் செயற்பட் டால் மாணவர்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக அமைந்துவிடும்.

நல்லாசிரியர்கள் கௌரவிக்கப்படவும் போற்றப்படவும் வேண்டும். மாணவர்களுக் குச் சிறந்த கல்வி போதித்து அவர்கள் கடமைகளைச் சிறப்பாக மேற்கொள்ள வழிகாட்டும் நல்லாசிரியர்கள் மாணவர் களால் விரும்பப்படுவதுடன் சமூகத்தால் போற்றப்படுவார்கள்.

ஏழைமாணவர்கள் பல்வேறு பிரச்சினை கள் மத்தியில் கல்வி கற்றுச் சிறந்த பெறு பேறுகளைப் பெற்றுக்கொள்வதையும் நாம் காண்கிறோம். ஆனால் சில செல்வந்த குடும் பங்களைச் சேர்ந்த மாணவர்கள் பெறுபேறு களில் வீழ்ச்சியுறுவதையும் காணமுடிகி றது. இதற்குக் காரணம் என்ன என்பதைச சிந்திதது்ப் பார்க்க வேண்டும்.

கல்வி புனிதமானது. பாடசாலைகள் ஆலயங்களைப் போன்றன. ஆசிரியர்கள் புனிதமானவர்கள். அவர்களது பணி தெய்வீகப் பணியாகும். இத் தெய்வீகப் பணியை மேற கொள்ளும் நல்லாசிரியர்கள் மூலம் சிறந்த பணி மேற்கொள்ளப்பட்டு சமுதாயம் உயா வடைந்து நாடு சுபீட்சம் பெறவேண்டும் என்றார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப் பினர் ஏ.எம்.செபஸ்ரின், பழைய மாணவிகள் சங்கச் செயலாளர் செல்வி ரீ.வேலுப்பிள்ளை, அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன், மாணவத தலைவி செல்வி அபிராமி சிவநாதன் ஆகி யோர் உரையாற்றினர். ஏற்புரையை பிரதி அதிபர் திருமதி இந்திராணி ஸ்ரீரங்கன் நிகழ்த்தினார். மாணவிகளின் கலை நிகழ்ச்சி களும் ஆசிரியர்களின் 'ஆசிரியர்களின் அவலம்' நாடகமும் இடம்பெற்றன.

ஆசிரியைகளைப் பாராட்டி விருதுகளும பரிசில்களும் வழங்கப்பட்டன. செல்வி ஆர்.கோகுலவாணி நன்றியுரை நிகழ்த் தினார். (து-52)

# தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற யாழ்.மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அலுவல்கள் அமைச்சி னால் ஐந்தாவது உலக சேக்கிழார் மாநாட்டினை முன்னிட்டு அண்மையில் பாடசாலை மாணவர்களிடையே நடாத் தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற யாழ் மாவட்ட மாணவர்களின் விபரம் வெளியாகி யுள்ளது.

போட்டி முடிவுகள் வருமாறு,

**பேச்சுப் போட்டி**

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம்:- செல்வன் சின்னத்துரை சோபிந்தன்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**மேற்பிரிவு**

இரண்டாம் இடம்:- செல்வி ரேக்கா தெய் வேந்திரம்- மல்லாகம் மகாவித்தியாலயம்.

**பண்ணிசை**

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம்:- செல்வி சே.கோபிகா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாட சாலை.

**மத்திய பிரிவு**

முதலாம் இடம்:- அழகேசன் அமிர்த சிந்துஜன்- இணுவில் மத்திய கல்லூரி.

**மேற்பிரிவு**

முதலாம் இடம்:- வாசுகி கிருஷ்ணன்- மானிப்பாய் மகளிர் கல்லூரி.

இரண்டாம் இடம்:- ஜெ.வைஷ்ணவி- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாட சாலை.

**நாடகம்**

இரண்டாம் இடம்:- (குழு)

செல்வன் வி.கீர்த்தனன், செல்வன் சி.நிரோஜன், செல்வன் வீ.விசாகன், செல்வி சி.சத்தியபாமா, செல்வி இ.பகீரதி, செல்வி ஏ.வித்தகி

(மீசாலை இந்து இளைஞர் ஆரம்ப அறநெறிப் பாடசாலை). (ற)

# பயிற்சிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தி னால் ஒழுங்குசெய்யப்பட்டு கடந்த 17ஆம திகதி நடைபெறவிருந்த பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி, சாவகச்சேரி, கோப்பாய ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு எதிர் வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை மாலை 8.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ள தாக மாவட்ட இணைப்பாளர் அறிவித்துள் ளார். (ற)

# நடமாடும் பற்சிகிச்சை சேவை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை மாணவர்களுக்கு மேற்படி பாடசாலையில் கிளிநொச்சி நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் கடந்த செவ்வாய்க்கிழமை நடமாடும் பற்சிகிச்சை மேற் கொள்ளப்பட்டது.

மேற்படி பாடசாலை மாணவர்கள் மத்தி யில் பற்சுகாதாரம் பற்றிய கருத்துரைகள் வழங்கப்பட்டபின் நூற்றி எழுபது மாணவர் கள் பார்வையிடப்பட்டு எண்பத்தைந்து மாணவர்களுக்குப்பற்சிகிச்சை வழங்கப்பட்டது.

இந்நடமாடும் பற்சிகிச்சை பற்றி செம்பியன் பற்று பொது சுகாதாரப் பரிசோதகர் கருத் துத் தெரிவிக்கையில்,

பாடசாலை வைத்திய பரிசோதனையில பற்சூத்தையால் அதிகளவில் மாணவர்கள் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது என் றும் இம்மாணவர்களுக்கான பற்பரிசோத னையும் சிகிச்சையும் நடமாடும் சேவை மூலம் மேற்படி பாடசாலையிலேயே மேற்கொண் டமை வரவேற்கக்கூடிய ஒன்றாகும் என்றார்.

அத்துடன் கடந்த திங்கட்கிழமை கிளி நொச்சி குருகுலம் சிறுவர் பராமரிப்பு இல் லத்திலும் நூற்றி எழுபத்தைந்து மாணவர்கள் பரிசோதிக்கப்பட்டு அதில் நூறு மாணவர்களுக்கு சிகிச்சை அளிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (து)


# குளிரூட்டி கையளிப்பு

(பொன்னாலை)

காரைநகர் மத்தி அம்பாள் கடற்றொழி லாளர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் 25 பேருக்கு எல்.ஆர்.ஓ நிறுவனம் கடலுணவு பதனிடுவதற்கான குளிரூட்டிப் பெட்டி வழங்கி யுள்ளது.

அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் நடைபெற்ற குளிரூட்டிப்பெட்டிகள் கையளிப்பு நிகழ்வில் இளைப்பாறிய யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளததுறை உதவிப் பணிப்பாளர் எஸ்.யோசேப், கடற்றொழில் பரிசோதகர் எஸ்.ஜெயசீலன் உட்பட பலர் கலந்துகொணடனர். (ற-49)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



**பிரபஞ்சத்தின் மூலம் பரம்பொருள் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் தோற்றத்தினை இயற்கை என்கின்றோம். சிறப்பு நிலையில் வெளிப்படுத்திக் கொள்வதை அவதாரங்கள் என்கின்றோம்.**

**சொல்லால் விளங்கமுடியாத, விவரிக்க முடியாத அன்பின் சாரமாக இருப்பவன் இதை உணர முடியுமே தவிர விளக்கமுடியாது.**

சுவாமி விவேகானந்தர்

## சமூக செயற்பாட்டு மையத்தின் சிறுவர் கலைக் கதம்பம்

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவன ஆதரவுடன் யாழ். சமூக செயற்பாட்டு மையம் நடாத்தும் சிறுவர் கலைக் கதம்பம் நாளை காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யுனிசெவ்வின்யாழ். மாவட்ட திட்ட அலுவலர் திருமதி யூடித்புறூனோ கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன், தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், யாழ்ப்பாண பிரதேச செயலர் பற்றிக்டிறஞ்சன் ,கோப்பாய் பிரதேச செயலர் திருமதி அஞ்சலாதேவி சாந்தசீலன், சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோக நாயகம் ,உடுவில் பிரதேச செயலர் எஸ். திருவாகரன், தெல்லிப்பழை பிரதேச செயலர் முரளிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் 50 மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் ந.சுகிந்தராஜ் தெரிவித்துள்ளார். (சு)

## கிராம அலுவலர்களுக்கான பயிற்சி பிற்போடப் பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 24ஆம்திகதி நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கிராம அலுவலர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான பயிற்சி நெறி தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். பயிற்சி நெறி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (சு)

# வெடிபொருள் அகற்றிய பிரதேசம் இன்று பொதுமக்களிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

தனங்களப்பில் வெடி பொருள் அகற்றப்பட்ட 450ஏ க்கர் வயல் நிலப்பிரதேசத்தை இன்று காலை 11மணிக்கு பொதுமக்களின் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளது. இப்பிரதேசத்தில் வெடிபொருள் அகற்றலில் ஈடுபட்ட இராணுவ மிதிவெடியகற்றும் பிரிவினரால் இப்பகுதியில் இருந்து 77 வெடிக்காத வெடி பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

தனங்களப்பு-சாவகச்சேரி வீதிக்கு மேற்காக உள்ள இப்பகுதியில் மிதிவெடிப்பிரதேசங்களாக இனங்காணப்பட்டு இதுவரை மிதிவெடி அகற்றப்படாத பகுதிகள் வேலியிடப்பட்டு மிதிவெடிக் குறியீடுகள் மூலம் அடையாளமிடப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது. (சு)

# ஹெரோயின் வைத்திருந்தவருக்கு மரண தண்டனை வழங்கித் தீர்ப்பு

(கொழும்பு)

அதிகளவிலான ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டநபருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

4.2 கிலோ ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கொழும்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கொச்சிக்கடையைச் சேர்ந்த லக்ஷ்மன் ஜெயவீர என்பவருக்கே மரணதண்டனை விதிக்கப்பட்டது.

விசாரணையை மேற்கொண்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதியரசர் சுனில் ராஜபக்ஷவே இத்தீர்ப்பினை வழங்கினார் . (சு-8)

## ஆங்கில வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பம்

மத்திய-மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் அனுசரணையுடன் வார இறுதி நாட்களில் யாழ்/மத்திய கல்லூரியில் நடைபெற்று வந்த- தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்ட பிரத்தியேக ஆங்கில வகுப்புகள் நாளை சனிக்கிழமை காலை 9.30மணிக்கு மீளவும் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளதால் மேற்படி வகுப்பில் பங்குபற்றிய அனைவரையும் தவறாது இதில் பங்குபற்றுமாறு மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத் தலைவர் இ.இரத்தின சிங்கம் கேட்டுள்ளார். (ற)

## ஆளில்லா...

அரசாங்கப் பேச்சாளர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

இறையாண்மையுள்ள அரசாங்கத்தின் வான்பரப்பில் தான் இவ் விமானம் பறந்தது. வான்,தரை,கடல் மார்க்கங்களை பாதுகாக்க வேண்டியது பாதுகாப்புப் படையினது அத்தியாவசியமான கடமை. இவ்விமானம் குண்டு வீசுவதற்கு ஒன்றும் போகவில்லை. வழமையான பயிற்சி நடவடிக்கைக்காகவே அனுப்பி வைக்கப்பட்டது என்றார்.

அரசாங்கத்தின் இவ் ஆளில்லா வேவு விமானத்தின் உளவு நடவடிக்கையானது யுத்த நிறுத்த மீறல் என்று யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் புகார் தெரிவித்துள்ளனர்.(சு-ற-4)

## விடுமுறை தினங்களிலும் கடைகள் திறக்க அனுமதி

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு சகல வர்த்தக ஸ்தாபனங்களையும் நாளை தொடக்கம் எதிர்வரும் முதலாம் திகதி வரை உள்ள சனி,ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் திறந்து வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டும் எனவும் எதிர்வரும் முதலாம் திகதிக்குப் பின் சகல ஞாயிறு, போயா மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களிலும் வர்த்தக ஸ்தாபனங்களை மூடி வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கி சகல வர்த்தகர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் யாழ் வணிகர் கழகம் கேட்டுள்ளது. (ற)


நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
ஆர்ஜா, சோனியாஅகர்வால்,
கருணாஸ் நடித்த



ஒரு கல்லூரியின் கதை
கா.நே: 10.30,2.30,6.30,9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார் (இரு வேடங்களில்)
நமீதா . வடிவேல்
நடித்த
சாணக்கியா
கா.நே: 11.00, 02.45, 6.00, (பு.நே)

மனோகரா யாழ்.
பார்த்திபன் . லட்சுமிராய். வடிவேல்
நடித்த



குண்டக்க மண்டக்க...
கா.நே.10.30.02.30.06.30.09.30(பு.நே)


# 27 ஆம் திகதி வவுனியாவில் தமிழ்த் தேசிய எழுச்சி நாள்

## வளாக மாணவர்கள் தீவிர பிரசாரம்

(வவுனியா)

வவுனியா பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் எதிர்வரும் 27 ஆம்திகதி வவுனியா நகரசபை மைதானத்தில் பிற்பகல் 3.00 மணியளவில் தமிழ் தேசிய எழுச்சி நாள் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

எழுச்சி நாள் நிகழ்வில் பொதுமக்களை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ள யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் தீவிர பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதே வேலை திருகோணமலையில் நாளை தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)


03.10.2005 முதல் 01.11.2005 வரை
தீபாவளி மலிவு விற்பனை
நீங்கள் வாங்கும் சகல பொருள்களுக்கும்
விசேட கழிவு
உடனே விரையுங்கள்
லைடன் புடவை நிலையம்
இல. 410, ஆஸ்பத்திரி வீதி
(பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்
NOTE:தீபாவளியை முன்னிட்டு 23 ஆம், 30 ஆம் திகதி ஞாயிறு தினங்களிலும் திறக்கப்படும் என்பதை அறியத் தருகிறோம்.
(C-அ-1754)



(C-அ-1689)

அன்பு வாசகர்களே...
உங்கள் வலம்புரியின் ஆறாவது ஆண்டின்
நிறைவில் பல பக்கங்களைக்கொண்ட
வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்
வெளிவரவுள்ளது.
கல்வி, மருத்துவம், உளவியல், சோதிடம்,
ஆன்மீகம், விஞ்ஞான ஆராய்ச்சிகள், வரலாறு,
பொருளியல், சமூகவியல், அரசியல், கவின்கலை
தொடர்பான பல்துறைசார் ஆக்கங்கள்
இச்சிறப்பிதழில் இடம்பெறவுள்ளன.
துறைசார் அறிஞர்கள், எழுத்தாளர்கள்,
மாணவர்களிடம் இருந்து ஆக்கங்களை
எதிர்பார்க்கின்றோம்.
உங்கள் ஆக்கங்களை
பிரதம ஆசிரியர்
வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்
வலம்புரி
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்
நிறைவு விழாச் சபை, வலம்புரி

திருமணக்கார் (குளிரூட்டியது)
வாடகைக்கு
☆ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
☆ விசேட வைபவங்கள் ☆சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீனகார்கள், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.



தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
T.P:0777-903090, 077-3086939,0777-246117, 077-6018467
(C-அ1699)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.